www.tamilarangam.net

# சிந்தனை

புரட்டாதி

***

1991





உள்ளே


* தமிழ் பேசும் மக்களுக்கு தேவைப்படுவது விடுதலையே ஒழிய போலியான உடன்பாடுகள் அல்ல
  - வாதேவ நாணயக்கார
* இன்றைய இனவாதம் - ஜயதேவ உயாங்கொட
* காணமற்போன ஜனநாயகம் - சரிநிகர்
* சதிமுயற்சியும் எதிர்ப்புரட்சியும் - பராராஜசிங்கம்
* நியாயப்படுத்தல் நியாயமானதா ? - காளிதாஸ்
* போலிஸ் விசாரணை - சிறுகதை
* மனிதகுலத்தை வாழவைக்க சோசலிசம் வேண்டும்
* வ.ஐ.ச.ஜெயபாலன் / சிவரமணி - கவிதைகள்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நியாயப்படுத்தல் நியாயமானதா?

இன்று இலங்கையின் அரசியலைப் பாதிக்கும், அதில் மேலாதிக்கம் செலுத்தும், சிங்களப் பேரினவாதமும் தமிழ்த்தேசியவாதமும் மக்களின் அன்றாட வாழ்வில் எத்தகைய பாதிப்புக்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன என்பது தெரியாத விடயமல்ல. இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தத்தினால் இழப்புகளை, மரணம், பசி, அகதிவாழ்வு அச்சம் என்பவற்றிற்கு முகம் கொடுப்பதிலிருந்து அரசினது இனவொழிப்பு அரசியலின் இலக்குகளாக தமிழ்பேசும் மக்கள் தொடர்ந்தும் இருப்பதற்கான சூழ்நிலைமைகளை, மேலும் தக்கவைக்கும் அடிப்படைக் காரணிகளைத் தொடர்ந்தும் பேணுபவைகளாக அரசினது பேரினவாத அரசியலும் இன்றைய யுத்தத்தில் ஈடுபட்டுள்ள புலிகளின் தனித்தமிழ்தேசியவாதமும் ஆதிக்கம் செலுத்தும் தருவாயில்; மக்கள் நன்மை பெறக்கூடிய தற்கால அமைதிகள் கூட அரச புலி என்பவை தமக்கு இராணுவ ரீதியிலான ஒய்வுகள் தேவையான நேரம் பிரகடனப்படுத்தும் விடயங்களாகவே இருக்கின்றன (இந்த யுத்த நிறுத்தங்களின் போது அரசிற்கும் புலிகளுக்குமிடையில் துப்பாக்கிகள் நீட்டப்படாத போதிலும் பொதுமக்களிற்கெதிராக இருதரப்பினரும் துப்பாக்கிகளை நீட்டுவார்கள் என்பது இதுவரைகால வரலாறு)

ஒரு சிறுபான்மைத் தேசிய இனத்தின், பெரும்பான்மை இனவாத அரசிற்கெதிரான, ஒடுக்கப்படுகின்ற மக்களின் போராட்டங்கள் எப்பொழுதுமே நியாயமிக்கவை. ஆனால் ஒடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் தமிழ்மக்களின் பிரதிநிதியாகத் தம்மைக் காட்ட, தமிழ் மக்களின் தேசியவிடுதலைப் போராட்டத்தைத் தமது கட்டுப்பாட்டிற்குள்ளேயே வைத்திருப்பதற்காக குரூரமான அணுகுமுறைகளை கடைப்பிடித்து வரும் புலிகளின் தலைமையினது குறுகியதேசியவாத மற்றும் இனவாதப் போக்கும் இவற்றுடன் இணைந்திருக்கும் வலதுசாரிப்போக்கும், அரசினால் ஒடுக்கப்பட்டிருக்கும் தமிழ்பேசும் மக்களிற்கே விலங்குகளை பூட்டி வைத்திருப்பதோடு ஒடுக்கப்படுகின்ற மக்களின் பேரில் எதிர்ப்பென்பது வேறு எந்த விதத்திலும் (அதாவது புலிகள் விரும்பாத) வடிவம் பெறாத வகையில், போராட்டப் பாதையை வரலாற்றின் புதைகுழியை நோக்கித் திருப்பியிருக்கிறது.

புலிகளின் அதிகாரம் நிலவும் யாழ்குடாவில் கருத்துச்சுதந்திரம் முற்றாக இல்லை என்ற கருத்து உள்ளது. இல்லையென்பதை விடவும் கருத்துச் சுதந்திரம் உள்ளது அது புலிகளுக்கு ஆதரவாக இருக்கும் வரைக்கும் என்பதே உண்மை. அப்படியிருக்கையில் புலிகளிற்கு கருத்துச்சுதந்திரத்தை தடைசெய்வதற்கான காரணம் இன்றும் இருப்பதைக் கொண்டு தெளிவாகக் கண்டுகொள்ளமுடிவது; புலிகளின் கருத்துகளுக்கு மக்களிடமிருந்து ஏராளமாய் எதிர்ப்புண்டென்பதைத்தான்.

பலவந்தமாகத் தன் பிரதிநிதித்துவத்தைத் திணிக்கும் வலதுசாரி குணாம்சங்களுள்ள ஒரு தலைமையின் தேசிய வாதத்தை விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் சக்தியாகக் கருதமுடியாது. தேசியவிடுதலைப் போராட்டமானது, மக்களின் விடிவிற்காகவும் மனித நேயத்தின் திசையிலும் திருப்பும் நோக்கம் கொண்ளருக்குமானால், பேரினவாத அரசுக்கெதிரான தேவையாக இன்றுமுள்ள சுயநிர்ணய உரிமைக்கான விடுதலைப் போராட்டத்திற்கான திசையையும் நோக்கையும் தீர்மானிக்கும் உரிமையை தமது இலாபங்களுக்காக மொத்த குத்தகைக்கு எடுக்க முயலும் ஒரு தலைமையினை அது ஒடுக்கப்படும் இனத்தைச் சேர்ந்ததென்பதற்காகவும் இராணுவ பலத்தில் கூடியது என்பதற்காகவும், அதன்

( 7 பக்கம் பார்க்க. )

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிந்தனை

3/91

"கம்யூனிசம் செத்துவிட்டது! அதைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டார்கள். இதுவரை காலமும் கம்யூனிசம், மார்க்சிசம் என்று சொல்லிக் கொண்டிருந்த நீங்கள் இனி என்ன செய்யப் போகிறீர்கள் ?"

இந்தக் கேள்விகள் சமீப காலத்தில் மார்க்சியவாதிகளை நோக்கிக் கேட்கப்பட்டு வருகின்றன. இதற்கான பதிலும் ஒன்றாகத்தான் இருந்து வருகிறது.

"நாம் இதுவரை காலமும் செய்துவந்த நடவடிக்கைகளையே மேலும் தொடருவோம்..." என்பதுதான் எமது பதிலாகும்.

குழிதோண்டிப்புதைக்கப்பட்டது மார்க்சியமோ அல்லது கம்யூனிசமோ அல்ல. அவ்வாறு புதைக்கப்பட்டது சீரழிந்த குட்டிமுதலாளித்துவ ஸ்டாலினிசம்தான், என்பதை இந்த கேள்வி கேட்பவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

ஒரு தனி நாட்டில் மட்டும் சோசலிச சமூகத்தைக் கட்டி எழுப்பலாம் என்ற மூடக் கொள்கையுடன், தனிக்கட்சி சர்வதிகாரத்தை ஏற்படுத்தி, பேச்சு சுதந்திரம், மக்கள் ஜனநாயகம் எல்லாவற்றுக்கும் சாவுமணியடித்து, அரசியல் எதிரிகளை நாடுகடத்தி, படுகொலை செய்து, உலக கம்யூனிஸ்ட் கட்சிகளையெல்லாம் தமது பிடிலுக்கு ஆடும் பொம்மைகளாக்கிய ஸ்டாலினிசம் தான் இன்று சரிந்துவிட்டது. மஸ்கோவில் மழைபெய்தால் இந்தியாவில் குடைபிடித்தவர்களும் பீக்கிங்கின் வெளிநாட்டுக் கொள்கைகளையெல்லாம் தமது வேதமந்திரமாக்கிக் கொண்டவர்களும் தான் இன்று நிலைகுலைந்து நிற்கிறார்கள். ஸ்டாலினிச மாவோ வாத தனிக்கட்சி சர்வதிகாரங்களையும், அவர்களின் சித்தாந்தச் சீரழிவுகளையும் அன்றிலிருந்தே எதிர்த்து வந்த புரட்சிகர மார்க்சிய வாதிகள் எந்த வகையிலும் நிலைதளர வேண்டிய அவசியம் இன்று ஏற்படவில்லை.

முதலாளித்துவ பிரசாரகர்கள் சொல்வது போல "கம்யூனிசத்தின் வரலாறு முடிந்து விடவில்லை". இப்பொழுதுதான் உலகத்தொழிலாளவர்க்கத்தின் கழுத்தில் கட்டப்பட்டிருந்த கல்லாக இருந்த ஸ்டாலினிசம் அகற்றப்பட்டு அது சுதந்திரமான வர்க்க அரசியல் போராட்டத்தை நடத்தத் தயாராகின்றது. இது ஒரு மறுமலர்ச்சி.

இந்த சகாப்தத்தில் எமது பணிகள் முன் போலவே தொடர வேண்டும்.

இதுதான் வரலாற்றை அறியாதவர்களுக்கும், வரலாற்றை மறைப்பவர்களுக்கும் நாம் தரும் பதில்.



ஆரம்பம் 1985
சுதந்திரமான கருத்துப் பரிமாறல்கள் மூலமே சிந்தனை உருவாகின்றது.

SINTHANAI
Haussmannstr. 107,
7000 Stuttgart 1,
GERMANY.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சொல்லுவார் சொல்லுவாராயின்....

ஜனாதிபதி மீதான குற்ற விசாரணை மனுவில் கையெழுத்திட்ட பின்னர் அதை விலக்கிக் கொண்டோரை பழிவாங்க மாட்டேன்.

- ஜனாதிபதி பிரேமதாசா

*மற்றவர்களுக்கு, ரிச்சார்ட் டி சொய்சாவையும் மற்றவர்களையும் நான் எப்படி பழி வாங்கினேன் என்பது ஞாபகமிருக்கட்டும்.*

* * *

ஆறு புதிய ஈரோஸ் எம்.பி.க்கள் நியமனம். சிவஞானம் உட்பட ஐவர் புதிய முகங்கள்.

- வீரகேசரி தலைப்புச் செய்தி.

*ஆறு புலிகள் "ஈரோஸ்" முகங்களுடன் பாரளுமன்றம் சென்றனர்.*

* * *

புலிகளுக்கு விமான எதிர்ப்பு பீரங்கி வழங்கப்படவில்லை.

- பாதுகாப்பு அமைச்சு

*ஏழு தொன் வெடி மருந்துகள், 2000 AK 47, பல நூறு இயந்திரத் துப்பாக்கிகள், இவைகளுக்கான குண்டுகள் ஆகியவற்றையே வழங்கினோம்.*

* * *

இன, மத, பால் கோட்பாட்டு பேதமின்றி ஒவ்வொரு பிரஜையினதும் உரிமைகளை மதித்தும் பேணிக் காத்தும் வருவது எமது போராட்டத்தின் அடிப்படை கோட்பாடுகளில் ஒன்றாகும்.

- புலிகள் இயக்கம் சிங்களப் பொதுமக்களுக்கு விடுத்த அறிக்கை.

www.tamilarangam.net

*இன, மத, பால், கோட்பாட்டு பேதமின்றி ஒவ்வொரு பிரஜையினதும் உரிமைகளை ஒடுக்குவது எமது அடுத்த அடிப்படைக் கொள்கை.*
*இந்த அடிப்படையிலேயே முஸ்லீம் சகோதரர்களை யாழ்ப்பாணத்திலிருந்து விரட்டியடித்தோம். சிங்கள கிராமவாசிகளைக் கொன்று குவித்தோம். மாற்றுக் கருத்துக் கொண்ட சகோதர இயக்கத்தவர்களைக் கொலை செய்தோம்.*

*                    *                    *

கடந்த ஒரு மாதகாலமாக முல்லைத் தீவு மாவட்டத்தில் தொடர்ந்த ராணுவ நடவடிக்கை காரணமாக தங்களுக்கு ஓய்வு தேவை எனவும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.
- செய்தி

*புலிகளுக்கும் தற்பொழுது ஓய்வு தேவை. ஓய்வு முடிந்தவுடன் மக்களைக் கொல்ல ஆரம்பிப்போம்.*

*                    *                    *

ஆனையிறவுப் போர் பற்றி நாங்கள் போரில் குதிப்பதற்கு முதல் நாள் காயப்படுகின்றவர்களுக்கு வைத்தியம் அளிப்பது தொடர்பான கலந்துரையாடலில் எங்களில் 300 பேர் உயிரிழப்பார்கள், 900 பேர் காயமடைவார்கள் என்று தெரிவித்து அதற்கு ஏற்ற மாதிரி ஒழுங்குகளை ( சவப் பெட்டிகளை !) செய்யுமாறு தெரிவித்திருந்தேன். யுத்தத்திற்கு முதல் நாளே இவ்வளவு பேர் இறப்பார்கள் என்று தெரிவித்திருந்தேன்.

புலிகள் இயக்கத்தலைவர் வே.பிரபாகரன் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டி.

*பாலகர்களை படுகொலைக்களத்திற்கு அனுப்பிவிட்டு, நான் பத்திரமாகப் பாதுகாப்பு அரணுக்குள் பதுங்கிக் கொண்டேன்.*

www.tamilarangam.net

# சீனோருக்கு மூடுவிழா !

நோர்வேயிலுள்ள நொராட் நிறுவனத்தினரால் முதல் முதலில் காரைநகரிலும் பின்பு யாழ்ப்பாணம் குருநகரிலும் ஆரம்பிக்கப்பட்ட சீனோர் நிறுவனத்தை ஸ்ரீ லங்கா அரசாங்கம் மூடுவதெனத் தீர்மானித்துள்ளது. கடந்த பத்து மாதங்களுக்கு மேலாக சம்பளம் வழங்கப்படாமல் இருந்த ஊழியர்களுக்கு பதவிநீக்கக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இலங்கையிலேயே ஒரு தனித்துவமான தொழிற்சாலையாக சீனோர், கடந்த காலங்களில் விளங்கியது. காரைநகர் பகுதியில் வாழ்ந்த ஒடுக்கப்பட்ட ஏழை மக்களின் இழிநிலைகளுக்கு அடிப்படைக்காரணம் அவர்கள் பொருளாதார ரீதியாக வேலைவாய்ப்புக்கள் அற்று ஒடுக்கப்பட்ட நிலையில் வாழ்வதுதான் காரணமாக இருந்தது. அந்த நிலையை மாற்றி அவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுப்பதன் மூலம் ஒரு தன்னம்பிக்கையுள்ள ஒரு சமூகத்தை உருவாக்கும் நோக்கத்துடன் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தத் தொழிற் சாலையில் படகுகள் கட்டுதல், பழுதுபார்த்தல், மீன் பிடித்தல், பதனிடல், ஏற்றுமதி செய்தல், வலைகள் செய்தல், மீன் பிடிக்கும் கயிறுகள் செய்தல் போன்ற பல தொழில்கள் நடைபெற்றன.

அரசாங்கத்தினால் நிறுவப்பட்ட மீன்பிடிக் கூட்டுத்தாபனம் இதே தொழில்களைச் செய்ய முயற்சித்து ஊழல்கள் நிறைந்து நட்டத்தில் ஓடிக் கொண்டிருந்த காலத்தில் இந்தத் தொழிற்சாலை ஒரு சிறந்த தொழிற்சாலையாக விளங்கிக் கொண்டிருந்தது. மீன், இறால் ஆகியவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது மட்டுமல்லாமல் வலைகள், படகுகள் ஆகியவையும் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

இலங்கையில் கொடுக்கப்பட்ட குறைந்த கூலியினால் இலாபம் பெற வெளிநாட்டு ஸ்தாபனங்கள் இந்தத் தொழிற்சாலையைப் பாவித்தது உண்மையாகிலும், காலாகாலமாக சாதிரீதியாக ஒடுக்கப்பட்டு தொழில் வாய்ப்பற்று உயர் சாதிமக்களின் தயவில் வாழநிர்பந்திக்கப்பட்ட மக்களுக்கு கல்வி, தொழிற்பயிற்சி, தொழில்வாய்ப்பு ஆகியவற்றை அளித்து அவர்களைத் உணர்வுள்ள தொழிலாளர்களாக்குவதில் இந்தத் தொழிற்சாலை முக்கிய இடத்தை வகித்தது.

வழக்கம் போலவே யாழ்ப்பாணக் குட்டி முதலாளிகள் தமது கல்வி, செல்வாக்கு ஆகியவற்றைப் பாவித்து இந்த ஸ்தாபனத்தின் அதிகார பீடங்களையெல்லாம் கைப்பற்றிக் கொண்டு அதிபிற்போக்கான முதலாளித்துவ நடைமுறைகளை தொழிலாளர்களுக்கெதிராக கையாண்டனர். சாதாரண தொழிலாளர்களை வருடக் கணக்கில் எந்த வித உரிமையுமற்ற " தற்காலிக" தொழிலாளர்களாக வைத்திருநதனர். ஒரு தொழிலாளியை நிரந்தரமாக சட்ட ரீதியாக "தற்காலிக" தொழிலாளியாக வைத்திருப்பதற்கு; ஒவ்வொரு ஆறுமாத முடிவிலும் வெள்ளிக்கிழமை 'வேலை நீக்க' கடித்தத்தைக் கொடுத்து திங்கட்கிழமை மீண்டும் அதே தொழிலாளிக்கு 'நியமன'க் கடிதத்தைக் கொடுத்து அவனது தொடர்ச்சியான சேவையை முறித்து வந்தனர் யாழ்ப்பாண "மனேஜர்"மார்கள். இவ்வாறான நடவடிக்கைகளையெல்லாம் எதிர்த்து தொழிற் சங்கரீதியாகப் போரடி தமது உரிமைகளை வென்றெடுத்தனர் இந்தத் தொழிலாளர்கள்.

சீனோர்த் தொழிற்சாலையின் "மூடுவிழா" 1977ல் ஐக்கிய தேசியக் கட்சி பதவிக்கு வந்தவுடனேயே ஆரம்பமாகியது. சீனோருக்கு விஜயம் செய்த மந்திரிகள் சீனோரின் பல பகுதிகளை தென்பகுதிக்கு மாற்றுவதில் ஈடுபட ஆரம்பித்தனர். காலகாலமாக நட்டத்தில் இயங்கிய மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் கப்பல் கட்டும் தொழிற்சாலை இயங்கிய மட்டக்குளிக்கு சீனோர் கப்பல் கட்டும் பகுதி மாற்றப்பட்டது. தலைமையகம், வலைத் தொழிற்சாலை எல்லாம்

www.tamilarangam.net

தெற்குக்கு மாற்றப்பட்டன. இடமாற்றத்தினால் பல நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்தனர். மீன் பதனிடும் பகுதிகள் தனி தமிழ் முதலாளிகளுக்கு விற்கப்பட்டன. இவ்வாறு வடபகுதியில் இருந்த ஒரு சிறந்த தொழிற்சாலையைச் சீரழித்த பின்பு, இன்று நடைபெறும் முடிவில்லாத போரைக் காரணம் காட்டி அதை வடபகுதில் முற்றாக மூடிவிடவும் தீர்மானித்துள்ளது. இதனால் 250 தொழிலாளர்கள் தமது வேலைகளை இழக்கின்றனர்.

தொடரும் போர் சூழ்நிலைமைகளினால் யாழ்ப்பாணத்தில் ஒரு இலட்சத்து 45 ஆயிரம் பேர் தமது சுய தொழில்களை இழந்துள்ளனர். சீனோர் தொழிலாளர்களும், நிவாரணத்தில் தங்கியிருக்கும் இந்த மக்களுடன் இணைகின்றனர்.

## வட-கிழக்கில் ஒரு இலட்சம் பேர் தொழில் இழந்துள்ளனர்.

வட - கிழக்கிலுள்ள யுத்த நிலை காரணமாக சுமார் ஒரு லட்சம் பேர் வேலையிழந்துள்ளனர் என்று அரசு சார்பற்ற நிறுவனங்கள் நடத்திய மதிப்பீட்டிலிருந்து தெரியவருகிறது. யுத்த நிலமைகளினால் தொழில் வழங்கும் நிலையங்கள் பல அழிந்துள்ளன. இதனால் அதிகமானவர்கள் தொழில் இழந்துள்ளார்கள்.

சுயதொழிலில் ஈடுபட்டு வந்த பலர் தற்போது அகதி முகாம்களில் இருக்கிறார்கள். வெளியூர்களில் தொழில் செய்து வந்தவர்களும் இப்போதுள்ள சூழ்நிலையினால் வீடுகளிலேயே தங்கியுள்ளனர்.

அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் நெற்செய்கை, மேட்டுநிலைப் பயிர்செய்கை, கால் நடை வளர்ப்பு போன்றவைகள் எல்லாம் பாதிக்கப்பட்டுள்ளதால் பெரும் தொகையான தொழிலாளர்கள் தொழில் இல்லாது வறுமையில் வாடுகின்றனர்.

(9.05.91)

( உள்அட்டைத் தொடர்ச்சி )

பிற போக்கு அம்சங்களைப் புறக்கணித்துவிட்டு கருத்து ரீதியாக அங்கீகரிப்பது சுத்த தேசியவாதமேயன்றி வேறொன்றுமல்ல. இத்தேசியவாதத்தில் மறைந்து போகும் வலதுசாரித்தனம், மனிதவிரோதம், ஜனநாயகமறுப்பு என்பவற்றை இதை ஆதரிப்பதன் மூலம் ஏற்றுக்கொள்வோமாயின் பெரும்பான்மைத் தேசிய இனத்தின் தேசியவாதத்திற்கும் இதற்கும் என்ன வித்தியாசம்? அதாவது ஒடுக்கப்படும் இனத்தின் தேசியவாதத்தில் இருக்கும் சிறப்பம்சங்களை களங்கப்படுத்தி, அதன் வடிவத்தை மனிதநியாயமற்றதாகவும் வலதுசாரித்தனமாகவும் மாற்றுவது உண்மையிலே மக்களின் நலனிற்காகவா?

வடக்கில் சந்ததிசந்ததியாக வாழ்ந்து வந்த முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்ட பொழுது அவர்களிற்கு ஆதரவாக, அதாவது அவர்கள் வெளியேற்றப்படுவதைக் கண்டித்து வடபகுதித்தமிழ் மக்களினால் ஓர் ஊர்வலத்தையோ எதிர்ப்பு நடவடிக்கையையோ நடாத்த முடியவில்லை என்றால் அதன் கருத்து வடக்கில் வாழும் அனைத்துத் தமிழ் மக்களும் தமிழ் இன வெறியர்கள் என்றோ, முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்படுவதை ஆதரிக்கிறார்கள் என்ற முடிவிற்கோ வரவேண்டும். புலிகளின் பிரதிநிதித்துவமானது பலாத்காரத்தின் அடிப்படையில்தான் உருவாக்கப்பட்டுள்ளது என்பதை மறுப்போமானால், மக்களின் அங்கிகரிப்பின்றியே ஒரு முழுப்போராட்ட வடிவத்திற்கே மனிதவிரோத குணாதிசயத்தைக் கொடுத்துவிடுகிறது என்பது இங்கு கவனிக்கப்படவேண்டும்.

ஒடுக்குமுறை எதிர்ப்பிற்கும் இனவெறிக்கும் நிச்சயம் வெவ்வேறு அர்த்தங்கள் உண்டு. ஒருபோதும் இது அதுவாகாது. மனிதநீதியினடிப்படையில் பார்ப்பதைவிடுத்து, தமிழ்த் தேசியவாதக் கண்ணோட்டத்துடன் 'மாத்திரம்' இந்நிகழ்வைப் பார்த்துவிட்டு "அரசின் எரிகின்ற இனவாதத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது இது ஒரு சிறுபான்மை இனம் இன்னுமொரு சிறுபான்மையினத்தை ஒடுக்குவது ஒன்றும் அவ்வளவு தவறான விடயமல்ல.

( 23ம் பக்கம் பார்க்க )

www.tamilarangam.net

# சதிமுயற்சியும் எதிர்ப்புரட்சியும்

1940ம் ஆண்டு. ஸ்டாலினின் அதிகாரம் உச்சக்கட்டத்தில் இருந்த காலம். பொல்ஷிவிக் கட்சியின் சீரழிவுகளையும், ஸ்டாலினின் தனி ஒரு நாட்டில் சோசலிசத்தைக்கட்டி எழுப்பலாம் என்ற மார்க்சிய விரோத சித்தாந்தத்திற்கும் எதிராகப் போராடிக் கொண்டிருந்த, ருசியப்புரட்சியின் இணைத்தலைவரான லியோன் ரொட்ஸ்கியும் அவரது ஆதரவாளர்களும் நாடுகடத்தப்பட்டும் படுகொலைசெய்யப்பட்டுக் கொண்டும் இருந்தார்கள். 1940ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20ம் திகதி லியோன் ரொட்ஸ்கி ஸ்டாலினின் ஏஜன்டினால் படுகொலை செய்யப்பட்டார். ஸ்டலினிசமும் அதன் வழிவந்த மாவோ வாதமும் தனிக்கட்சிச் சர்வதிகாரம், உள்கட்சி ஜனநாயகமின்மை ஆகியவற்றினால் உலக நாடுகளின் புரட்சிகளையும், இயக்கங்களையும் (ஈழ விடுதலை இயக்கங்கள் உட்பட) சீரழித்தன. இவற்றின் ஆளுமையில் இருந்த மக்களினால், ஜனநாயகத்திற்காகவும் வர்க்க சுதந்திரத்திற்காகவும் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களின் விளைவாக ஸ்டாலினிச அதிகாரிகளின் சர்வதிகாரங்கள் மெல்ல மெல்ல அகல ஆரம்பித்தன. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 20வது மகாநாட்டில் பொதுச் செயலாளர் குருஷ்சோவ் ஆற்றிய உரையிலிருந்து இன்று வரை அதிகாரிகளின் ஆட்சிகளில் சிதைவுகள் ஏற்பட்டுக் கொண்டு வந்துள்ளன.



*லியோன் ரொட்ஸ்கி*

## சதிமுயற்சி

சோவியத் யூனியனின் ஸ்டாலினிச அதிகாரிகளின் இறுதி மூச்சாக 1991 ஆகஸ்ட் மாதம் 19ம் திகதி ஒரு சதி முயற்ச்சி ஏற்பட்டது. விடுமுறையில் சென்ற சோவியத் யூனியனின் ஜனாதிபதி மிகயில் கொபர்ச்சொவ் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டபின் அவருடைய மந்திரி சபையிலுள்ள சில அங்கத்தவர்கள் தம்மை ஒரு அவசரகால அரசாங்கமாகப் பிரகடனப்படுத்தினர். இப்படியான ஒரு சதிமுயற்சி உடனடியாக ஏற்படும் என எவரும் எதிர்பார்க்காவிட்டாலும் அதற்கான சாத்தியக்கூறுகள் ஏற்கனவே இருந்தன. ஸ்டலினிச அதிகாரிகளின் சலுகைகளையும் அதிகாரங்களையும் இல்லாமற் செய்து ஜனநாயக சுதந்திரங்களை வளர்க்க முயற்சித்த மிக்காயில் கொபரச்சோவ், மறுபுறத்தில் முதலாளித்துவப் பொருளாதாரத்துடன் சமரசம் செய்து சந்தைப் பொருளாதாரத்தின் மூலம் தேசத்தின் பொருளாதார நிலையை வளர்க்கலாம் என்ற நப்பாசையும் கொண்டிருந்தார். தொழிலாள வர்க்கத்தினரை ஊக்குவித்து அரசியல் புரட்சியை மேலும் தொடர வைப்பது தமக்கும் தமது சகாக்களின் அதிகாரங்களுக்கும் ஆபத்தாக வருமென்றும் அவர் தயங்கினார். தமது அதிகாரங்களும் சலுகைகளும் தொடர்ந்து நிலைக்க வேண்டுமென்ற ஸ்டாலினிச பழமைவாதிகளுக்கும், புதிதாக ஏற்பட்ட ஜனநாயக




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சூழலில் சந்தைப் பொருளாதாரத்தை உருவாக்கி முதலாளித்துவத்தைக் கட்டி எழுப்ப முயற்சிக்கும் பொறில் ஜெல்ட்ஸின் போன்ற சீர்திருத்த வாதிகளுக்குமிடையில் கயிற்றில் நடப்பது போல கொபர்ச்சோவ் ஜனாதிபதியாகச் செயற்பட்டார். பழமைவாதிகளும் சீர்திருத்தவாதிகளும் தமது தேவைகளுக்கு கொபர்ச்சோவைப் பாவிப்பதற்காக நடவடிக்கைகளை எடுத்தனர்.

1989களில் சீர்திருத்தவாதிகளுடன் இணைந்து கொண்ட கொபர்ச்சோவ் பழமைவாதிகளின் சீற்றத்திற்குள்ளானார். அவர்களின் சீற்றத்தையடக்க அவர்களுடன் ஒத்துப்போவதாகக் காட்டிக் கொண்ட போது சீர்திருத்தவாதிகள் வெகுண்டெழுந்தனர். ஆனால் அவர்களிடம் ராணுவபலம் இருக்கவில்லை. ஆனால் அப்பொழுது ஏற்பட்ட சுரங்கத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்தைத் தமக்குச் சாதகமாகப் பாவித்துக் கொண்டனர். வேலைநிறுத்தம் செய்த தொழிலாளர் கொபர்ச்சோவும் அவருடைய அரசாங்கமும் பதவி துறக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தனர். இந்த தொழிலாளர்களுடைய எழுச்சியினாலும் தேசிய இனங்களின் போராட்டங்களினாலும் பொருளாதாரத்தில் ஏற்பட்ட சீரழிவுகளினாலும் கலக்கமடைந்த கொபர்ச்சோவும் ஜெல்ட்ஸினும் தங்களுக்குள் ஒரு இணக்கத்தை ஏற்படுத்திக் கொண்டனர். இந்த இணைவில் குடியரசுகளுக்கு அதிக அதிகாரங்களைக் கொடுக்கும் "யூனியன் ஒப்பந்தமும்", அரசியல் வேலை நிறுத்தங்களைத் தடைசெய்யும் தீர்மானமும் எடுக்கப்பட்டது. ஜெல்ட்ஸினுக்கும் கொபர்சோவுக்குமிடையில் ஏற்பட்ட இந்த இணைவு பழமைவாதிகளை வெறுப்படையச் செய்தது.

ஜுன்மாதம் 14ம் திகதி பிரதம மந்திரி பவ்லோ தனக்கு மேலதிக அதிகாரங்கள் வேண்டுமென்று பாராளுமன்றத்திடம் கேட்டார். கே.ஜி.பி தலைவரான கிரைவ்கோவ், உள்நாட்டு மந்திரி பூகோ, பாதுகாப்பு மந்திரி யாசேவ் (பின்பு சதிமுயற்சியில் ஈடுபட்டவர்கள்)ஆகியோர் பிரதம மந்திரியின் கோரிக்கைக்கு ஆதரவளித்தனர். ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைதது பழமைவாதிகளின் அதிகாரங்களைக் கூட்டுவதே அவர்களின் நோக்கமாக இருந்தது. ஆனால் பாராளுமன்றத்தில் கொபர்ச்சோவிற்கு அதிக ஆதரவு இருந்ததினால் அவரின் அதிகாரங்களைப் பறிக்க முடியவில்லை. சட்டரிதீயான நடவடிக்கைகள் தோல்வி கண்டதினால், ஆகஸ்ட் 20ம் திகதி "யூனியன் ஒப்பந்தம்" கைச்சாத்திடப்பட முன்பு சதிமுயற்சி மேற்கொள்ளப்பட்டது.



www.tamilarangam.net

## பழமைவாதிகளின் பலவீனம்!

ஸ்டாலினிசப் பழமைவாதிகளின் இந்த சதிமுயற்சி தோல்வியடைந்ததிற்குக் காரணம் பொறிஸ் ஜெல்ஸ்டீன்தான் என்று மேற்கு நாடுத் தொலை தொடர்பு சாதனங்கள் சினிமாப்பாணியில் காட்ட முழுமுயற்சிகள் எடுத்துக் கொண்டன. ஆனால் உண்மையில் சதிமுயற்சியில் ஈடுபட்டவர்களின் நிச்சயமற்ற ஊசலாடும் தன்மையும் பலவீனங்களுமே முக்கிய காரணங்களாக இருந்தன. மக்களோடு எல்லாவிதமான உறவுகளையும் இழந்துவிட்ட ஸ்டாலினிச பழமைவாதிகள் ஒரு சிறு தொகையினரின் ஆர்ப்பாட்டங்களைக் கண்டதும் பின்வாங்கிவிட்டார்கள். ஆர்ப்பாட்டம் செய்த மக்களின் நடவடிக்கைகளுக்கு வித்திட்டதே கொபர்ச்சோவின் கடந்தகால அரசியல் தான் என்பதையும் யாரும் மறுக்க முடியாது. சதிமுயற்சி செயதவர்களின் பலவீனங்கள் ஆரம்பத்திலேயே தெளிவாகத் தெரிந்தன. கொபர்ச்சோவைத்தவிர வேறு எந்த சதிமுயற்சி எதிர்ப்பாளனையும் கைது செய்ய அவர்கள் முயற்சிக்கவில்லை. முக்கிய வன்முறை ஆயுதமான ராணுவம் முற்றாகப் பாவிக்கப்படவில்லை. சதிமுயற்சி ஆரம்பித்து ஐந்து மணித்தியாலங்களுக்கு பின்பே ராணுவம் மஸ்கோ வீதிகளுக்கு வந்தது. போக்குவரத்து, விமானநிலையங்கள், தொலைதொடர்பு ஆகியவை எந்த விதக் கட்டுப்பாடுமற்று இயங்கின. தொழிற்சாலைகளும் அலுவலகங்களும் சாதாரணமாகவே இயங்கின. கே.ஜி.பி. இவற்றைக் கட்டுப்படுத்த சக்தியற்றிருந்தது என்று எண்ணுவது தவறாகும், கட்டுப்படுத்த துணிவற்றிருந்தது என்பதே உண்மையாகும். பழமைவாதிகளின் இந்த பலவீனமான நடவடிக்கைகளே சதிமுயற்சி தோல்வியடைவதற்கான காரணமெனலாம்.

ருசிய மாநிலத்தின் பாராளுமன்றத்திற்கு முன்பு கூடிய சனத்திரள் உச்சக்கட்டத்தில் 150,000 ஆக இருந்தது, சாதாரணமாக 20,000 மக்கள் கூடியிருந்தனர் எனச் செய்திகள் தெரிவித்தன. ஆனால் இவர்களுக்கெதிராக எந்தவிதமான கடுமையான ராணுவநடவடிக்கைகளும் ( மூன்று இறப்புக்களைத் தவிர) எடுக்கப்படவில்லை. 1989 ஜீன் மாதம் சீனாவில் தினமின்சதுக்கத்தில் கூடிய பத்து இலட்சம் மக்களுக்கெதிராக கவசவாகனங்களை ஏற்றி ஆயிரக்கணகானோரைக் கொலைசெய்த சீனஅரசாங்கத்துடன் ஒப்பிடும் பொழுது ருசியப் பழமைவாதிகள் பலவீனர்கள்தான்!

இந்த சதிமுயற்சிக்கெதிராக பொறிஸ் ஜெல்ஸ்டீன் அறிக்கைகளையும் கட்டளைகளையும் விடுத்துக் கொண்டிருந்தார். இந்தச்சந்தர்ப்பத்தில் மேற்கு நாடுகள் அவரை சினிமாபாணியில் வீரசாகசங்கள் செயபவராகவே சித்தரித்தன. தாமாகத்திரண்ட மக்களைத்தவிர ஜெல்ஸ்டீன் மக்களை அணிதிரட்டுவதில் எந்தவகையிலும் ஈடுபடவில்லை. பொது வேலைநிறுத்தத்திற்கான அழைப்பு விடுக்கப்பட்ட போதும் சோவியத்யூனியன் தொழிலாளர்கள் முழுமையாக வேலைநிறுத்தங்களில் ஈடுபடவில்லை. ஆனால் இந்த சந்தர்ப்பத்தை பொறிஸ் ஜெல்ஸ்டீன் தமது தேவைகளுக்காகப் பாவித்துக் கொண்டார்.

## எதிர்ப்புரட்சி

சதிமுயற்சி காலத்தில் தான்விடுத்த கட்டளைகளையெல்லாம் சட்டரீதியாக்கிக் கொண்டதுடன் ருசியக் கம்யூனிஸ்ட் கட்சியைக் கலைப்பதிலும் வெற்றி கண்டுவிட்டார். கொபர்ச்சோவிற்கு இருந்த ஒரு தளமும் இல்லாது போய்விட்டது. மறுபுறத்தில் ருசியமாநிலத்தில் ருசிய பேரினவாத மேலாதிக்க நடவடிக்கைகள் அதிகரிப்பது காணக்கூடியதாக உள்ளது. ருசிய மேலாதிக்கம் மற்றைய தேசிய இனங்களுக்கு மேலாகவும் பாவிக்கப்படுமோ என்ற பயமும் மற்றைய குடியரசுகளுக்கு ஏற்பட்டுள்ளது. கம்யூனிஸ்ட் கட்சி கலைக்கப்பட்டதும், தொழிற்சாலைகளில் கட்சி வேலைகளி தடைசெய்யப்பட்டதும், சுதந்திரமான அரசியல் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளின் ஆரம்பமாகவே கருதவேண்டியுள்ளது.

அடுத்து வரும் மாதங்களில் விரைவாக அமுல் நடத்தப்படப் போகும் சந்தைப் பொருளாதாரமும் பொறிஸ் ஜெல்ஸ்டீனினால் நியமிக்கப்பட்டிருக்கும் அதிகாரிகளும் சாதாராண மக்களி மீதான ஒடுக்கு முறைகளை ஆரம்பிக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாட்கள் வெகு தூரத்திலில்லை. சீரழியப் போகும் பொருளாதாரத்திற்கு இனியும் பழமைவாதக் கம்யூனிஸ்டுகளைக் குறைகூற முடியாது. இன்று மேற்குலகப் பிரசார மாயையில் மயங்கியிருக்கும் மக்கள் சந்தைப் பொருளாதாரத்தின் கொடூரங்களை - வேலையில்லாமை, முதலாளித்துவ சுரண்டல்கள் - நேரடியாக அனுபவிக்கப் போகின்றார்கள். அந்த அனுபவங்களிலிருந்தே ருசியாவின் வருங்கால வரலாறு எழுதப்படப் போகின்றது. மஸ்கோவிலுள்ள இடதுசாரியான "வடிம் டமய்" பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியில் பின் வருமாறு கூறினார்," .. ஜெல்ஸ்டீனும் அவரது இயக்கமுமே முக்கியமான அபாயம் என்பதை இடதுசாரிகள் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். ஸ்டாலினிசம் பழைய உருவில் அழிந்து விட்டது. கே.ஜி.பி., ராணுவம் ஆகியவற்றினுள் இவர்கள் இன்னும் இருக்கலாம். சமீப நிகழ்வுகள் போல வருங்காலங்களிலும் அவர்கள் நடவடிக்கைகளில் ஈடுபடலாம். ஆனால் "ஒரு கட்சி சர்வதிகாரம்" என்ற அர்த்தத்தில் ஸ்டாலினிசம் இல்லாது போய்விட்டது. தற்போதய பிரதான ஆபத்து - வலதுசாரிகளின் 'பொப்புயுலிச வாத'ஏதோச்சதிகாரிகளின் - சர்வதிகாரமேயாகும்."

இந்த எதிர் புரட்சியாளர்களின் நடவடிக்கைகளுக்கெதிரான ருசியத் தொழிலாளர்களின் ஜனநாயக மற்றும் வரக்க உரிமைக்கான போராட்டங்களுக்கு ஆதரவளிப்பதே இடதுசாரிகளின் கடமையாகும்.

- பரராஜசிங்கம்



### பிரச்சனையின் பின்னணி

## ஒரு சொர்க்கம் ஏன் எரிகின்றது?

ஸ்ரீ லங்காவிலுள்ள பிரச்சனைகளுக்கான காரணங்களை அறிவதற்கு இன்றைய நிகழ்வுகளை அவதானிப்பது அவசியமாகும்.

ஸ்ரீ லங்காவில் ஆட்சியிலுள்ள அரசாங்கமானது, உள்நாட்டு, வெளிநாட்டு முதலாளித்துவத்திற்குச் சேவகம் செய்யும் சிங்களப் பேரினவாத அடிப்படையில் அமைந்த பிரபல்யவாத அரசாங்கமாகும். சகலவிதமான ஜனநாயக நடவடிக்கைகளையும் எதிர்ப்புக்களையும் அவசரகால அதிகாரங்களைக் கொண்டு அடக்குவதன் மூலம் இந்த அரசாங்கம் பதவியில் தொடருகின்றது. மறுபுறத்தில் வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களுக்கெதிரான ஒரு போரை அது நடத்துவதுடன் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளையும் அங்கீகரிக்க மறுக்கின்றது.

மேற்கு நாடுகள், உலக வங்கி ஆகியவற்றின் வெளிஉதவிகளில் தங்கியிருப்பதுடன், "தேர்தல்" மூலம் பதவிக்கு வந்த பிரபல்யவாத அரசாங்கமாகவும் அது இருப்பதனால், மேற்கு நாட்டு நிதி முதலாளிகளின் கட்டளைகளுக்குக்கீழ்படிவதுடன், நாட்டில் "ஜனநாயகம்" உள்ளதாகவும் சர்வதேச சமூகத்திற்குக் காட்ட அது முனைகின்றது.

நாட்டிலுள்ள ஜனநாயகரீதியான எதிர்ப்புக்களுடன் ஜே.வி.பி., புலிகள் இயக்கம் ஆகியவற்றின் வன்முறை தழுவிய எதிர்ப்புக்களும் இருக்கின்றன.

சிங்கள இளைஞர்களின் மத்தியிலுள்ள விரக்தியின் விளைவாக உருவாகிய ஜே.வி.பி.யானது, தனது அரசியற் கொள்கையடிப்படையில், மற்றைய அரச எதிர்ப்பியக்கங்களுடன் இணைந்து செயற்படத் தவறியது. இதனால் அது, அரசாங்கத்திற்குச் சாதகமாகவும், தனக்குப்பாதகமாகவும், மற்றைய அரச எதிரப்பியக்கங்களை அழிக்க முயன்றது. ( புலிகளும் இதே போன்ற நடவடிக்கைகளை மேற் கொண்டனர் ). இது அதன் அழிவுக்கு இட்டுச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சென்றது. ஆனால் ஜே.வி.பி.யின் தோற்றத்திற்குக் காரணமான அடிப்படைக் காரணிகள் இன்னும் நாட்டிலுள்ளன.

தமிழ் தேசிய பிரபல்ய வாதக்குழுவான புலிகள் இயக்கம், அரசாங்கம் உருவாக்கியிருக்கும், யுத்த சூழ்நிலையினாலேயே உயிர் வாழ்கின்றது. தொடர்ச்சியாக வந்த அரசாங்கங்கள் தமிழ் தேசிய இனத்தின் அடிப்படை உரிமைகளை மறுத்து வந்ததுடன் வடக்கிலும் கிழக்கிலும் தொடர்ச்சியான ஆயுத நடவடிக்கைகளையும் மேற் கொண்டு வந்தன. இந்த நடவடிக்கைகளே புலிஇயக்கம் போன்ற இயக்கங்களின் தோற்றத்திற்குக் காரணமாக அமைந்தன. இந்தச் சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறையானது இந்த இயக்கங்களுக்கு அவசியமான பிரபல்ய தளத்ததை தமிழ் மக்கள் மத்தியிலளிக்கின்றது.

எனினும் இவர்கள் தமது மக்களை ஸ்ரீலங்கா அரசாங்கத்திலும் பார்க்க கொடூரமான முறையில் ஒடுக்குகின்றனர். எந்தவிதமான ஜனநாயக நடவடிக்கைகளையோ அல்லது எதிர்க்கருத்துக்களையோ அவர்கள் அனுமதிப்பதில்லை. ( ஸ்ரீலங்கா அரசபடைகள் கொலை செய்த அரசியல் தலைவர்கள், போராளிகள் தொகையிலும் பார்க்க அதிகமானவர்களைப் புலிஇயக்கம் கொலைசெய்திருக்கின்றது! )

இந்த இரு பொப்பியுலிச சக்திகளுக்கும் தனித்துவமான பொருளாதாரத் தளம் கிடையாது. அரசாங்கம் வெளிநாட்டு நிதி உதிவிகளிலும், புலி இயக்கமானது போதைவஸ்துக் கடத்தல், உள்நாட்டில் மற்றும் வெளிநாடுகளிலும் வாழும் தமிழர்களிடம் கட்டாயமாகப் பெறப்படும் நிதி, மற்றும் மறைமுக நிதி உதவிகளில் தங்கியிருக்கின்றது.

இந்த இரு பிரபல்ய வாதசக்திகளின் இருப்பும் முரண்பாடுகளும், தீர்க்கப்படாமலேயிருக்கும் தேசிய மற்றும் பொருளாதாரப் பிரச்சனைகளுமே ஸ்ரீலங்காவிலுள்ள பிரச்சனைகளுக்கு மூலகாரணமாக அமைகின்றன.

இந்தப் பிரச்சனைகள் எமது காலனித்துவ வரலாற்றினால் உருவாக்கப்பட்டவை. (இது பற்றிய வரலாற்றுரீதியான காரணங்கள் பரவலாக விவாதிக்கப்பட்டும் விளக்கப்பட்டும் வந்துள்ளதால் அவற்றை இங்கு தராது விட்டுவிடுகின்றேன்.) இப்பிரச்சனைகளே தீர்க்கப்பட வேண்டியவைகளாகும். இப்பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கெதிரான இடையூறுகளையே நான் கவனத்திலெடுத்துள்ளேன்.

இவையே எனது கருத்தின்படி முக்கியமான இடையூறுகளாக தென்படுகின்றன.

மக்களின் அடிப்படை உரிமைகளை அங்கிகரிக்க மறுத்தும் நாட்டில் ஜனநாயக நடவடிக்கைகளை ஒடுக்கியும் அரசு செய்யும் அரசாங்கத்தை அகற்றுவதே முதலாவது கடமையாகும்.

இரண்டாவதாக தமிழ்பேசும் மக்களின் அடிப்படைப் பிரச்சனைகள் தீர்க்கப்படுவதுடன் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கிகரிக்கப்பட வேண்டும். இந்த நடவடிக்கையே தமிழ் மக்கள், புலி இயக்கம் போன்ற தேசிய இயக்கங்களின் பாசக்கயிறுகளிலிருந்து தம்மை விடுவிக்க உதவும்.

( 6.10.1991 இல் நடைபெற்ற இலங்கையர் சங்கக் கருத்தரங்குக்காக எழுதப்பட்ட கட்டுரை. )

( 24ம் பக்கத் தொடர்ச்சி )

ஜீ.ஐ.டி. தர்மசேகர.

குணசேன மகாநாம ( அரசாங்க லிகிதர் சேவை சங்கம் )

ஜே.டீ.சில்வா ( ஐக்கிய ஆசிரியர் சங்கம் )

ரனத் குமாரசிங்கா

யூ.ஜி.எஸ்.விமலரத்ன

கருணாரத்ன ( புகையிரத ஊழியர் சங்கம் )

ஜயந்த கமன்பில

சுனில் அபேவீர (அரசாங்க லிகிதர் சேவை சங்கம் )

என்.டீ. எட்மன்ட் ( ஸ்ரீ லங்கா சுதந்திர தொழிலாளர் சங்கம் )

( ந.ச.ச.க.வின் துண்டுப்பிரசுரத்திலிருந்து எடுக்கப்பட்டது.)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இன்றைய இனவாதம்

*இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் கலாநிதி ஜயதேவ உயாங்கொட ஆற்றிய உரையின் தமிழாக்கம்.*
*தமிழில்: ச.பாலகிருஷ்ணன்.*

மேஜ் இயக்கம் இனங்களுக்கிடையிலான இனவாதப் பிரச்சினைகள் தொடர்பாக செயற்படுவதனால் இலங்கையின் இனவாதப் பிரச்சினையின் தற்போதைய நிலமைகளுக்கு ஏதுவான காரணிகள் சில பற்றியே நாள் பேச விரும்புகிறேன்.

சமீபத்தில் (15.02.91) மட்டக்களப்பு பிரதேசத்தில் உரையாற்றிய ஜனாதிபதி அவர்கள் கூறியதாக தேசியப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருந்த ஒரு விடயத்தை மையமாக வைத்து எனது பேச்சை ஆரம்பிக்க விரும்புகிறேன். "Do not ask for Eelam anymore.....We have given you Ellam"... இனி மேலும் ஈழம் கேட்காதீர்கள். நாங்கள் உங்களுக்கு எல்லாம் கொடுத்துவிட்டோம் என ஜனாதிபதி அவர்கள் கூறியதாக பத்திரிகைகளில் குறிப்பிடப்பட்டிருந்தன.

"ஈழம்", "எல்லாம்" என்ற இரு சொற்கள் கேள்விக்கிடமாக அமைந்துள்ளதை விட இனவாதப் பிரச்சினை தொடர்பாக இந்த அரசாங்கத்தின் அரசியல் நிலைப்பாடுகள் இச்சொற்களின் மூலம் பிரகடனப்பட்டுள்ளது என்றே நான் கருதுகின்றேன். இந்நிலைப்பாட்டில் இரு காரணிகள் அடங்கியுள்ளன. ஒன்று, இந்நாட்டில் இனமுரண்பாடு ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணிகள் சட்டரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும், அரசியல் யாப்பு ரீதியாகவும் தீர்க்கப்பட்டுவிட்டன. எனவே இனவாத முரன்பாடு உருவாகுவதற்கு ஏதுவான காரணிகள் இனிமேல் செல்லுபடியற்றவை எனப்பிரகடனப் படுத்துதல்.

உதாரணமாக அரசாங்கத்தினர் பிரகடனப்படுத்துவது என்னவென்றால், மொழியுரிமைப் பிரச்சினை இரு மொழிகளும் அரசகரும மொழியாக ஆக்கப்பட்டுள்ளதன் மூலம் தீர்க்கப்பட்டுள்ளது. தொழில் வாய்ப்புப் பிரச்சினைகள் இனவிகிதாசார அடிப்படையில் தொழில் வழங்குவதன் மூலம் தீர்க்க எல்லாவித நடைமுறைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சர்வகட்சி மாநாட்டின் மூலம் இனப்பிரச்சினையின் ஏனைய காரணிகளைத் தீர்ப்பதற்காகவும், அதிகாரப் பங்கீட்டை உறுதி செய்வதற்காகவும் தொடர்ந்தும் கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாகாணசபை நடைமுறைகள் மூலம் ஆட்சியதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. எனவே இந்நடைமுறைகள் மூலம் இனப்பிரச்சனை ஏற்படுவதற்கு வழிவகுத்த காரணிகள் பலவற்றைத் தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது என்பதாகும்.

அரசாங்கத்தின் இப் பிரகடணத்தில் அடங்கியுள்ள இரண்டாவது காரணி என்னவென்றால் இந் நாட்டில் இதுவரை இருந்த அரச தலைவர்களைவிட தற்போதைய ஜனாதிபதி பிரேமதாச அவர்கள் இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு அரசியல் ரீதியாகவும், தனிப்பட்ட ரீதியிலும் மிகவும் அர்பணிப்புடன் செயற்படுபவர் என்றும் இப்பிரச்சனையைத் தீர்த்து வைப்பதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதில் அரசியல் அர்ப்பணிப்புடையவர் என்ற நிலைப்பாட்டைப் பிரகடணப்படுத்தலாகும்.

குறிப்பாக அரசாங்கத்தின் இந்த இரண்டாவது நிலைப்பாட்டைப் பிரகடணப்படுத்துகின்ற முக்கிய வசனங்களான இலங்கை ஒரு பல்லினப் பாங்கான நாடு, பன் முகக் கலாசார சமூகம்(Multi ethnic, Multi Cultural society) போன்றவற்றை அரச பேச்சாளர்கள் தொடர்ச்சியாகப்பயன்படுத்தி வருவதையும் காணக் கூடியதாக உள்ளது. இந்நிலைப்பாடுகளை மிகக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கவனமாகப்பரீட்சித்துப் பார்க்கும் போது இப்பிரச்சனை ஒரு புதிய தன்மையை, அல்லது ஒரு புதிய கட்டத்தை அடைந்துள்ளதையும் இப்புதிய கட்டம்என்ன என்பது பற்றி இவ்வரசாங்கத்தின் நிலைப்பாடுகள் தெளிவாக கவனத்தைச் செலுத்தி செயற்படவில்லை என்பதையும் விளங்கிக் கொள்ளலாம்.

இனப்பிரச்சனைக்கு தீர்வொன்றை நாம் காணவேண்டுமானால், இன்று வட-கிழக்கில் தோன்றியுள்ள யுத்த நிலமைகளையும், அந்த யுத்தத்தின் மூலம் சமாதானத்திற்கு விடுவிக்கப்படும் சவால்களையும், மையமாக வைத்தே சிந்தித்துச் செயற்படவேண்டும். இந்நாட்டில் தமிழ் மக்களின் மொழியுரிமை, பொருளாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு, காணி போன்ற பல்வேறு துறைகளைச் சார்ந்த சம்பிரதாயப் பிரச்சினைகள் இனவாத முரன்பாட்டிற்கு வழிவகுத்தாலும் இக்காரணிகள் எல்லாவற்றையும் விட இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கும் யுத்தத்தின் விளைவாகத் தோன்றியுள்ள பிரச்சினைகள் இம்முரன்பாட்டின் கேந்திர பிரச்சினையாக உருவெடுத்துள்ளன. வேறுவிதத்தில் கூறுவதானால், இப்பிரச்சினைக்கு காரணிகளாக அமைந்த சமூக, பொருளாதார, அரசியல் காரணிகளை இரண்டாம் நிலைக்குத் தள்ளிவிட்டு யுத்தத்தின் விளைவாகத் தோன்றியுள்ள பிரச்சினைகள் முதலாம் இடத்தை வகிக்கின்றன எனக் கூறலாம். எனவே யுத்தம் , சமாதானம், ஜனநாயகம், ஆகிய முரன்பாடுகளின் ஊடாகத்தான் இனவாத முரன்பாட்டைப் பற்றி ஆராய வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். இதனுடன் தொடர்புடைய இன்னொரு காரணி என்னவென்றால் ஜனநாயகம், சமாதானம் போன்ற விடயங்களில் எதிர்கால விளைவுகள் பற்றிய கருத்துக்களை எவ்வளவு தூரம் இந்நாட்டின் அரசியல் கட்சிகள் முன்வைத்துள்ளன என்பதாகும்.

இந்நாட்டின் இனவாதப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் அடிப்படையிலேயே 1987 ஆம் ஆண்டு மாகாணசபை அமைப்புமுறை முன்வைக்கப்பட்டது. இலங்கையின் இனவாதப்பிரச்சினைக்குத் தீர்வாக மாகாண சபைகள் அமைப்புமுறையின் மூலம் இலங்கையில் அதிகாரப் பங்கீட்டுக்கு கோட்பாட்டு ரீதியிலும், செயற்பாட்டு ரீதியிலும் 87 ஆம், 88ஆம் ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்ட சாதகமான விளைவுகள் எதுவும் இருக்குமானால் அவை இப்போது இல்லையென்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

இதற்கான முக்கிய காரணம் என்னவென்றால் ஆட்சியதிகாரங்களை முறையாக பகிர்ந்தளிக்காமல், நிர்வாக அடிப்படையில் நிர்வாக நடைமுறைகளை பரவலாக்கும் செயல்முறையின் அடிப்படையில் மட்டும் செயற்பட விளைவதாகும். அதிகாரப்பங்கீடு என்பதை அரசியல் அல்லது ஜனநாயக அடிப்படையில் கருதுவதானால் மத்தியப்படுத்தப்பட்டுள்ள அரசஆட்சியதிகாரங்கள் பிரதேச அடிப்படையில் அல்லது இனகுழுமங்களின் அடிப்படையில் பங்கிடுவதேயொழிய நிரவாகமுறைகளை பரவலாக்குதல் என்பது அல்ல.

நிர்வாக பரவலாக்குதல் என்பது அரசின் கொள்கைகளை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு நிர்வாகப் பொறுப்புகளை பிரதேச அடிப்படையில் எப்படி பரவலாக்குவது என்ற கேள்விக்கு விடைகாணும் நடைமுறையாகும்.

அதிகாரங்களை பங்கீடு செய்யும் மாகாணசபைமுறையினுள் இருக்கும் ஆட்சியதிகாரங்களை இலங்கையின் ஏனைய இனக்குழுமங்களுடன் பகிர்ந்துகொள்ளவேண்டிய கோட்பாட்டை மூடிமறைத்து, நிறைவேற்று அதிகாரங்களை மத்தியில் வைத்துக்கொண்டு செயலாற்றுவதற்கு எவ்வகையில் மாகாணசபை அமைப்பை பயன்படுத்தலாம் என அரசாங்கம் முயலும் தன்மையையே கடந்த இரண்டு, மூன்று வருடங்களில் நாம் காணக்கூடியதாகவிருக்கின்றது. இலங்கையின் இனவாதப் பிரச்சினையின் தீர்வு தொடர்பாகவும் இலங்கையின் ஜனநாயகமயப்படுத்தல் பற்றிய பிரச்சினைத் தொடர்பாகவும், அரசியல் அதிகாரங்களின் பங்கீட்டின் தேவையானது என்றுமில்லாதவாறு இன்று முக்கிய தேவையான ஒன்றாக உருவெடுத்துள்ளது என்றே நான் கருதுகின்றேன்.

ஆனால் இந்நாட்டின் பிரதான அரசியல் சக்திகள் அதிகாரப் பகிர்வு எனும் ஜனநாயக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோட்பாட்டிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் அல்லது ஆதரவு தெரிவிக்காத ஒரு சூழ்நிலையில் இத்தகைய அதிகாரப் பகிர்விற்கான தேவையேற்பட்டுள்ளமை ஒரு துரதிஷ்டமான நிலையாகும். எனினும் மேர்ஜ் போன்ற இயக்கங்களின் இன்றைய பிரதான கடமை என்னவென்றால் இந்த அதிகார பங்கீட்டிற்காக போராடுவது ஆகும்.

இந்த அதிகாரப் பங்கீட்டின் தற்போதைய நிலைமையானது அன்மைக்காலமாக தென்னிலங்கையில் நிலவுகின்ற பிரச்சினையை மையமாகக் கொண்டே ஏற்பட்டது என்றே நான் கருதுகிறேன். நான் தென்னிலங்கை பிரச்சினை எனக் கூறுவது என்னவென்றால் சிங்கள சமூகத்தில் அரச அதிகாரங்கள் தொடர்பாக நிலவும் அதிகாரத்துவ ஜனநாயக சமூக அமைப்பிற்கு முன் நிலைமானிய அமைப்பில் நிலவிய அரச அதிகாரங்கள்பற்றிய அதிகாரத்துவ நிலைப்பாடுகள் பற்றியதே. இந்த சிங்கள சமூகத்தில் நிலவும் அதிகாரத்துவ அரசியல் கோட்பாடு என்னவென்றால் இலங்கையின் அரசானது ஒருமுகப்படுத்தப்பட்ட சிங்கள, பௌத்த ஆதிக்கத்தை உறுதி செய்யும் அதிகாரம் கொண்ட ஒன்றாக திகழவேண்டும் என்பதாகும். இக்கூற்றை நிரூபிப்பதற்கு உதாரணம் ஒன்றை கூற விரும்புகிறேன். பல்லின, பலமத, பன்முக கலாசார பங்குகளைப்பற்றி அடிக்கடி பேசும் ஜனாதிபதி அவர்கள் அந்த பல்லின, பலமத, பல கலாசார தன்மைகளைப்பற்குப் பேசும் அதேவேளையில் இலங்கையின் காலனித்துவ அமைப்பிற்கு முன்னைய நிலமானியத்துவ சமுதாயத்தில் நிலவிய அரச ஆட்சிமுறை பற்றிய கோட்பாடுகள், தன்மைகள், சின்னங்கள், எல்லாவற்றையும் பிரபலமாக முன்வைக்கும் செயல்பாட்டில் ஈடுபட்டிருக்கின்றார். எங்களுடைய சுதந்திரதின வைபவங்களில் அல்லது தொலைக்காட்சியின் செய்திகளின் போதும் நாம் காணும் பண்டைய அரசாட்சி பற்றிய கோட்பாடுகள் பலரின் கேலிக்கு விருந்தாக அமைந்துள்ளது. ஆனாலும் என்னைப் பொறுத்தளவில் அவை சிரிக்கக்கூடிய விடயங்களல்ல. நாம் மிகவும் பயப்படக்கூடிய விடயங்களே.

இலங்கையில் அரசியல் ரீதியிலும் சமூக ரீதியிலும் வன்முறைகள் மேலோங்கியிருக்கும் ஒரு காலகட்டத்தில் அரசியல் சம்பிரதாயங்கள் எப்படி நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதை நாம் கண்டிருக்கிறோம். இந்த நிலைப்பாடுகள் பற்றிய பிரச்சினைக்கு நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டே சகல அதிகாரங்களும் ஒருமுகப் படுத்தப்பட்டுள்ள, சமுகத்தில் பல்வேறுபிரிவுகளுக்கும் அப்பாற்பட்ட நபராக ஜனாதிபதி விளங்குவதும் அரசியல் நிலமைகளை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய விதத்தில் நாட்டின் ஸ்தாவர தன்மையை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கையாக அவர் கூறுவதையும் காணலாம்.

இவ்விடத்தில் முக்கிய எதிர்முரன்பாட்டை அரசாங்கம் எதிர்நோக்கியுள்ளது. அதில் ஒன்று தான் இந்த சிங்கள, பௌத்த பெரும்பான்மையின சமூகத்தின் ஆதரவை எப்படிப் பெற்றுக்கொள்வதென்பதாகும். இந்த சிங்கள, பௌத்த பெரும்பான்மையினரின் ஆதரவை பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் அதேவேளையில் தான் சிறுபான்மையினரின் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண தயாராக இருக்கின்றதென்பதை அரசாங்கம் கூறவேண்டிய நிலையில் இருக்கின்றது. இவ்வகையான எதிர்முரன்பாடு மிகவும் வலிமையான வகையில் வெளிப்படுத்தப்படும் ஒரு சந்தர்ப்பமாக ஒரு பக்கத்தில் சர்வகட்சி மாகாநாட்டிற்கு தலைமை தாங்கி அதன்மூலம் இனவாதப் பிரச்சினைக்குத் தீர்வு காண ஜனாதிபதி முயற்சிகளை மேற்கொள்ளும் அதேவேளையில் தான் பௌத்த சாசன அமைச்சிற்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் பௌத்த பிக்குகளைக் கொண்ட அதியுயர் பிக்கு ஆலோசனைச் சபையை ஏற்படுத்தி சிங்கள, பௌத்த இனவாத ரீதியில் இயங்கும் பிக்குகளினதும், பிக்குகளல்லாதவர்களினதும் கருத்துக்களுக்குத் தான் தவறாது செவிமடுப்பதாகவும் வெளிப்படையாக கூறவேண்டியுள்ளது.

அன்மையில் பௌத்த சாசன அமைச்சினால் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு

www.tamilarangam.net

மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு கருத்தரங்கில் உரையாற்றிய ஜனாதிபதி "பண்டைய அரசர்களைப் போல தலைமைப் பிக்குகளின் கருத்துகளுக்கு செவிமடுப்பது மட்டுமல்ல அவைகளை ஏற்றுக் கொள்வதற்கும் தான் தயாராக இருப்பதாகவும் உறுதியளித்துள்ளார். அதே வைபவத்தில் பண்டைய அரசர்கள் போல எமது ஆலோசனைகளையும், வேண்டுகோள்களையும் ஜனாதிபதி அவர்கள் ஏற்றுக்கொண்டு செயற்படவேண்டுமென்று பௌத்த பிக்குமார்களும் வேண்டுகோள் விடுத்தார்கள். அரசியல் ரீதியாகவும், கருத்தியல் ரீதியாகவும் மிகவும் சக்தி வாயந்தவர்களாக இருக்கும் பௌத்த பிக்கு சமூகததனரின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை அரசுக்கு இருப்பதை உணர்ந்து கொள்ளமுடியும்.

என்னைப் பொறுத்தளவில் சிங்கள பௌத்த சமூகத்திலுள்ள பௌத்த பிக்குகளும், அச்சமூகத்தின் உயர்தர வர்க்கத்தினரும் உண்மையான, ஜனநாயக ரீதியிலான அரசியல் மற்றும் கருத்தியல் பரிமாற்றத்தை முழுமையாக நிராகரிக்கும் குழுவினராக இருப்பது இங்கு பிரதான முரண்பாட்டை ஏற்படுத்துகின்றது. நான் நினைக்கின்றேன் இலங்கையில் பௌத்தமதம் தொடர்பாக நிலவும் முக்கிய கருத்தியல் முரன்பாடுகளில் ஒன்றுதான் அது என்று. அது இலங்கைச் சமூகத்தின் அரசியல், கருத்தியல் துறை ஜனநாயகமயப்படுவதை நிராகரிக்கும் தன்மை கொண்டதாகும்.

நான் இங்கு கூறுவதற்கு முயற்சிப்பதென்னவென்றால், இன்று சிங்கள சமூகத்தில் நிலவும் அதிகாரத்துவ அரசியல் கோட்பாடு- அது அரசாங்கம் பற்றியதானாலும் சரி, பௌத்த கோயில்கள் பற்றியதானாலும் சரி- ஜனநாயக க் கோட்பாடுகளைக் கொண்டவையல்ல. அரசியல் ரீதியாக காலனித்துவ யுத்தத்திற்கு முன்பு நிலமானிய யுகத்தில் நிலவிய ஏகாதிபத்திய அதிகாரத்துவ அரசமைப்பு பற்றிய கோட்பாடுகளைக் கொண்டவையாகும்.

தென்னிலங்கையில் சிங்களவர்களில் தலைமையிலுள்ள எல்லாக் கட்சிகளும் பல்வேறு மட்டங்களில் நான் இங்கு விளக்கிய தென்னிலங்கை பிரச்சினைக்குள் சிக்குண்டு கிடக்கின்றன. எனவே எங்களைப் போன்ற ஜனநாயக சக்திகளுக்கு இன்று இருக்கின்ற பிரதான சவால் என்னவென்றால் நான் முன்பு கூறிய தென்னிலங்கை பிரச்சினைக்கு அரசியற் கோட்பாட்டு ரீதியிலான ஜனநாயக மாற்றுத் தீர்வை எப்படி முன்வைப்பது என்பதாகும்.

1987 ஆம் அண்டு எங்களில் பலரின் எதிர்ப்பார்ப்புகளுக்கு மத்தியில் இனவாதப் பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்ட மாகாணசபையானது " இந்தத் தென்னிலங்கைப் பிரச்சினைக்குப்" பலியானதாலேயே இன்று இந்த அவலநிலையை அடைந்திருக்கிறது என்றே நான் கருதுகின்றேன். இன்று அரசாங்கம் மட்டுமல்ல எதிரணி அரசியல் கட்சிகளும் "இந்தத் தென்னிலங்கைப் பிரச்சினைக்குள்" சிக்குண்டு கிடப்பதை நாம் உணரக் கூடியதாகவுள்ளது.

நான் இந்தப் பேச்சை முடிக்கு முன்பாக எனது இப்பேச்சில் நான் முன் வைத்த நிலைப்பாடுகள் மூலம் நாம் எதிர் நோக்க வேண்டிய சவால்கள் என்ன என்பதைப் பற்றிச் சுருக்கமாகக் கூற விரும்புகின்றேன். சுருக்கமாகக் கூறுவதானால் இது இலங்கையை முழுமையாக ஜனநாயக மயப்படுத்துதல் பற்றிய பிரச்சனையுடன் நேரடியாகத்தொடர்புடையஒன்றாகும். ஜனநாயகமயப்படுத்துதல் என்பது சம்பிரதாயபூர்வமான கருத்தில் பாராளுமன்றம், தேர்தல்கள், சட்டம், ஆதிக்கம் போன்ற கோட்பாடுகளை மட்டும் உள்ளடக்கியவையல்ல. எமது சமூகத்தில் அரசியல் நிறுவனங்கள், அரசியல் கோட்பாடுகள், சமயநிறுவனங்கள், சமயக் கோட்பாடுகள், கலாசாரத் தனித்துவங்கள், கருத்தியல் உரிமைகள் போன்ற பல்வேறு துறைகளிலும் ஜனநாயக மரபுகளை நிலைநாட்டல் வேண்டும்.

இந்த சந்தர்ப்பத்தில் நான் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். "வல்லிபுரம் தகடு" சம்பந்தமாக சமீபகாலத்தில் அடிக்கடி பிரசாரப்படுத்தப்பட்டது. அரசாங்கத்தின் சார்பான புத்திஜீவிகள் மட்டுமல்ல, இப்போது ஐ.தே.கட்சிக்கு எதிரான புத்திஜீவிகளும் ஒன்று சேர்ந்து சரித்திர தொல் பொருள் ரீதியாக யாழ்கூடா நாடு சிங்கள

( 18ம் பக்கம் பார்க்க )



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜேர்மானியச் சிறுகதை

# போலிஸ் விசாரணை

எர்ணஸ்ட் லாடன்
தமிழில்: க.நா.சு.

"இப்போது நீ விரும்புவது எதாவது உண்டானால் சொல்லு" என்று சாக இருந்த வாலிபனைப் பார்த்து ஸ்ருட்காட் நகரத்து ரகசியப்போலிஸ் மேல் அதிகாரி கேட்டான்.

எதிரே இருந்த ஒரு ஜன்னலை ஒரு சூன்யப் பார்வையுடன் பார்த்துக் கொண்டு நின்றான் வாலிபன். ஜன்னலின் பலத்த இரும்புக் கம்பிகள் வானத்தை நீலச்சவுக்கங்களாக வெட்டிக் கொண்டிருந்தன. சிறைக்கு வெளியே ஒரு பழ மரத்தில் பழங்கள் கம்பீரமாகப் பழுத்துத் தொங்கின. அங்கிருந்தால், பழங்கள் தித்திப்பாய் இருக்கும் என்று அவன் எண்ணினான்; அவைகளை நிறையத் தின்னலாம்; பழுத்துத் தானாகவே வாயில் வந்து விழும்; வயிறு புடைக்கத் தின்று திருப்தி அடையலாம். நான் ஏன் அகப்பட்டுக் கொண்டேன் என்று எண்ணினான் வாலிபன்.

"நான் சொல்கிறது புரியுதா உனக்கு?" என்று மறுபடியும் கேட்டான் போலீஸ் அதிகாரி. "இப்பொழுது நீ விரும்புவது எதாவது உண்டா?"

உண்டு. நான் விரும்புவது ஒன்று உண்டு என்று எண்ணிளான் வாலிபன். இல்லை விரும்பாதது ஒன்று உண்டு. நான் மறுபடியும் சிறைப்பட விரும்பவில்லை. உன்னிடம் அடியும் உதையும் திட்டும்பட நான் விரும்பவில்லை. இல்லாவிட்டால் அந்த ஜன்னல் வழியாகத் தப்பி ஓட நான் முயற்சித்திருப்பேனா? நான் அதை விளையாட்டாகச் செய்தேன் என்று நினைக்கிறாயா நீ?

"நீ சாகுமுன் உன் தாயாரைப் பார்க்க விரும்புகிறாயா?"

தாயார் என்று தான் சொன்னான். அவன் ஏன் அப்படிக் கேட்பானேன்? நான் சாகப் போகிறேன் என்று அவன் எனக்கு ஞாபகப்படுத்தவும் வேண்டுமா? அந்தமாதிரி அவன் என்னிடம் பேசுவது நல்லெண்ணத்துடனா? இல்லை. ஏதோ ஏமாற்றுவித்தை தான்.... அவன் சாக மாட்டான். சௌக்கியமாக வீடு திரும்பிவிடுவான்.

ஆமாம். நான் இப்பொழுது என் தாயாரைப் பார்க்க விரும்புகிறேன். என் தாயாரைப் பற்றி அவன் நல்லெண்ணத்துடன் எனக்கு நன்மை செய்யும் எண்ணத்துடன் தான் ஞாபகப்படுத்தினானோ, என்னவோ?....

முகத்தில் எவ்விதமான பாவமும் இல்லாமல் அவன் போலீஸ் அதிகாரியைப் பார்த்து தலையை ஆட்டினான்.

"உன் தாயாருக்கு ஆள் அனுப்பியிருக்கிறேன். அவள் இன்னும் சற்று நேரத்திற்குள் வந்து விடுவாள். இன்னும் ஒரேயொரு கேள்விக்குத் தான் நீ பதில் சொல்லவேண்டும், உன்னிடம் அந்த பிரசுரங்களைக் கொடுத்தது யார்?...."

போலீஸ் அதிகாரி பதிலுக்குக் காத்திருந்தான்.

அப்படியா என்று எண்ணினான் வாலிபன். அந்தக் கேள்வியினால் அவன் வாயில் ஒரு கசப்புத் தோன்றிற்று. அசுசியாக இருந்து .... வெறுப்பு.... அவன் கத்தாதிருப்பதற்காக ஒரு தரம் அவன் வாயில் ஏதோ ஒரு பந்தைத் திணித்தார்கள். இப்பொழுது அவன் பேசவேண்டும் என்று விரும்பினார்கள். தன் நண்பர்களைக் காட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். பல நாட்களாகப் போலீசார் அவன் நண்பர்களைத் தேடிக்கொண்டு அலைந்தார்கள். ஆட்களோ அவர்கள் இருந்த இடமோ அவர்களிற்குத் தெரியவில்லை. கசம் பிடித்த போலீஸ் அதிகாரிகள்.... கசம்....

"நான் ஒன்றும் சொல்லுவதாக இல்லை"

"உன் தாயாரை ஞாபகத்தில் வைத்துக் கொள்"

வாலிபன் மேற்கூரையைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

அதற்கப்புறம் அவன் நாலு மணி நேரம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உயிருடன் இருந்தான். நாலு மணி நேரத்தில் எவ்வளவோ கேள்விகள் கேட்கலாம்.

மூனு நிமிஷத்திற்கு ஒரு கேள்வி கேட்பதாக வைத்துக் கொண்டாலும் நாலு மணி நேரத்தில் எண்பது கேள்விகள் கேட்கலாம். போலீஸ் அதிகாரி நல்ல அதிகாரி; அதாவது போலீஸ் முறைகளை சரியாக அறிந்தவன். இதற்குமுன் அவன் எவ்வளவோ பேர்வழிகளை விசாரணை செய்திருக்கிறான். சாக இருந்தவர்களையும் விசாரித்திருக்கிறான். என்ன செய்ய வேணும் என்று அறிந்திருக்க வேணும், கேள்விகள் கேட்பதில் திறமை வேணும், போலீஸ் அதிகாரியாக இருக்க. சிலரை அதட்டிக் கேட்க வேணும்; சிலரை ரகசியமாகக் கேட்கவேணும். சிலரை பயமுறுத்த வேணும்; சிலரை கொஞ்ச வேணும்.

"உனக்கு நல்லதிற்குத் தான் சொல்லுகிறேன்" என்றான் போலீஸ் அதிகாரி. ஆனால் அந்த வாலிபன் காதில் இனி உரத்தக் கேள்விகளும் விழாது. மெதுவான கேள்விகளும் விழாது. மௌனமாகவே அவன் இறந்துவிட்டான்."

மறுநாள் பத்திரிகைகளில் பின்வரும் அறிக்கை வெளிவந்தது;

"சர்க்காருக்கு யாரோ விரோதமான பிரசுரங்கள் வைத்திருந்ததாகவும் அவற்றைப் பிறருக்கு வழங்கியதாகவும் ட- எனும் கூலி வேலை செய்யும் ஆசாமியை ஸ்ருட்காட் ரகசியப் போலீசார் குற்றம் சாட்டி கைது செய்ய முயலும்போது அவன் மூனாவது மாடியிலிருந்து தன் ஜன்னல் வழியாகக் கீழே குதித்துவிட்டான்.

வெளிமுற்றத்தில் எலும்பு நொறுங்கி அவன் கிடந்ததைப் போலீசார் கண்டனர்.


சில நாட்கள் போலீஸ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றும் குணமடையாமல் அவன் இறந்து விட்டான்."

நன்றி: ஐரோப்பியச் சிறுகதைகள்.

( 16ம் பக்கத் தொடர்ச்சி )

பொத்த ஒற்றையாட்சியின் ஒரு பகுதிதான் என்பதைஒப்புவிக்க முயன்று வருகின்றனர். இங்கு சரித்திரத்தையும் தொல்பொருள் காரணிகளையும் திரிபுபடுத்தி கருத்தியல் ரீதியாக இலங்கை சிங்கள பௌத்த ஒற்றையாட்சியின் கீழுள்ள நாடு தான் என்பதைஒப்புவிக்க முயலுகின்றமையைக் கடந்த சில வாரங்களாக நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. ஐ.தே.கட்சியிலுள்ளவர்களுக்கு மட்டுமல்ல அதற்கு எதிராகச் செயற்படும் சிங்கள, பௌத்த இனவாத புத்திஜீவிகளுக்கு இன்று சிங்கள, பௌத்த அரசு தொடர்பான கோட்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கான சந்தர்ப்பத்தை அரசு ஏற்படுத்திக் கொடுத்துள்ளதால் அக்கோட்பாடுகள் மிகவும் ஆர்வத்துடனும், வலிமையுடனும், முன்னெடுத்துச் செல்வதற்கான பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே சரித்திர, தொல்பொருளியல், சமூகவியல் காரணிகளைத் திரிபுபடுத்தி,சிங்கள, பௌத்த மேலாதிக்கத்தை அடிப்படையாகக் கொண்டு சிங்கள இனத்துவம் பற்றிய நிலைப்பாடுகளை நிலைநாட்ட மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகளை முறியடித்து மாற்றாக இலங்கையில்நிலவிய பல்லின சமூகத் தன்மையை முன்னெடுத்துச் செல்வதற்கும், சரித்திர, தொல்பொருளியல் துறைகள் சார்ந்த அறிஞர்களின் துணையுடன் ஆய்வுகளை மேற் கொண்டு யதார்த்த ரீதியான கருத்துக்களை மக்கள் முன் நிலை நிறுத்துவது மேஜ் போன்ற அமைப்புக்களின் கடமையாகும்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மனிதகுலத்தை வாழவைக்க சோசலிசம் வேண்டும்.

*( 1991 பெப்ரவரி மாதம் நடைபெற்ற நான்காவது அகிலத்தின் 13வது காங்கிரஸில், கிளை அங்கத்தவர்களின் கலந்துரையாடலுக்கு விடப்பட்ட விஞ்ஞாபனத்தின் தமிழாக்கம். )*

## உலகத்தின் குழப்ப நிலை.

இன்று உலகம் ஒரு திருப்பு முனைக்கு வந்துள்ளது. இந்தக் கோளிலுள்ள சகலருடைய அடிப்படையான சமூக மற்றும் கலாச்சார தேவைகளைத் திருப்திப்படுத்துவதற்கும் பசியையும் பிணியையும் தீர்க்கக் கூடிய விதத்திலும் தொழில் நுட்ப அறிவு வளர்ந்துள்ளது. ஆனால் சமூக ஏற்ற தாழ்வுகள் வளருகின்றன. மக்களை் பெரும் துரதிர்ஷ்டமான விளைவுகளை எதிர் நோக்குகின்றனர். அதே சமயத்தில் பிற்போக்கு அமைப்புகளின் கட்டுப்பாடுகளிலிருந்து தம்மை விடுவிக்கக் கூடிய தொழிலாளர் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் வெகுஜன நடவடிக்கைகளுக்கான சாத்தியக் கூறுகளும் இருக்கின்றன.

இதனாலேயே சோசலிச முன்னோக்கில் மக்களுக்கு ஏற்பட்டுள்ள நம்பிக்கையீனங்கள் நீங்கிவிடும் என்று நம்பக்கூடியதாகவுள்ளது - இந்த நம்பிக்கை தானாகவே ஏற்படக்கூடியவொன்றல்ல அத்துடன் இதற்குக் கால அவகாசமும் தேவை.

இந்த இரண்டு முன் நிபந்தனைகளும் இணைக்கப்படும் பொழுதுதான் வெகுஜனங்கள் முன்னணிக்கு வருவார்கள். அவை உதிரியான போராட்டங்களாக இருக்க மாட்டாது. முழுமையான அரசியல் மற்றும் சமூக முன்நோக்கினைக் கொண்ட, முதலாளித்துவத்திற்கும் அதிகாரத்துவ சர்வதிகாரங்களுக்கும் மேலான ஒரு நாகரிகமான அமைப்புக்கான போராட்டமாகவே அது அமையும்.

இன்று அணுஆயுதங்களைக் குறைக்க எடுக்கப்படும் நடவடிக்கைகளையும் மீறி ஆயுதப் போட்டி தொடருகின்றது. குவிக்கப்படும் ஆயுதங்கள் ஏதோ ஒருவகையில் பாவிக்கப்படுகின்றன - விளைவுகள் கட்டுமிராண்டித்தனமான கொலைகளாக இருக்கின்றன. 1945லிருந்து இன்றுவரை 80 போர்களை உலகம் கண்டுள்ளது - இதனால் 200 இலட்சம் மக்கள் மரணமடைந்துள்ளார்கள். ஈராக் மீதான ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு இந்த ஆயுதப்போட்டியின் கொலைகாரத்தனமான விளைவுகளை எடுத்துக்காட்டியுள்ளது. இருப்பில் இருக்கும் ஏராளமான ஆயுதங்கள், விஷக்கிருமி மற்றும் இரசாயன ஆயுதங்கள், அணுசக்திநிலையங்கள் - இவையெல்லாம் வெடித்துச் சிதறும் போது மனிதஇனமே அழிந்து போகக்கூடிய ஆபத்து இருக்கின்றது.

தற்காலத்தில் அதிகரித்துவரும் "தொழில் நுட்ப" விபத்துக்கள் முதலாளிகளினது இலாப நோக்கங்களையும் அதிகாரிகளின் பொறுப்பற்ற தன்மைகளையுமே காட்டுகின்றன. மறுபுறத்தில் சுற்றாடலைச் சீர்குலைத்து, ஓசோன் வலையத்தைச் சிதைத்து, காடுகளை அழித்து, சமுத்திரங்கள், ஆறுகள், நீர்தேக்கங்கள், காற்று எல்லாவற்றையுமே மாசுபடுத்தி மனிதவாழ்வு சீரழிக்கப்படுகின்றது.

இந்த உலக மக்களை அதிகமாகப் பாதிக்கும் பஞ்சம் விவாசய உற்பத்திக் குறைவினால் ஏற்படவில்லை, பணம் படைத்த நாடுகளிலுள்ள விவசாய நிறுவனங்களுக்கு இலாபத்தை ஏற்படுத்துவதற்காக உற்பத்தியைக் குறைப்பதனாலேயே ஏற்படுகின்றது. இந்த நாடுகளில் பயிரிடும் நிலப்பரப்பைக் குறைப்பதற்கு விவசாயிகளுக்கு அரசமானியம் வழங்கப்படுகின்றது! இதன் விளைவு உணவுக் களஞ்சியங்கள் வெறுமையாகின்றன.

1970களில் உலகப்பொருளாதாரத்தில் ஏற்பட்ட மந்தமானது மூன்றாமுலக நாடுகளிலுள் மக்களின் வாழ்க்கை நிலமைகளை வெகுவாகப் பாதித்துள்ளது. 1930களில் காணப்பட்ட வறுமை நிலமைகளிலும் பார்க்க ஆதிகமான வறுமை நிலமைகள் உருவாகியுள்ளன. இந்த நாடுகளில் சுயதேவையைப்பூர்த்திசெய்யும் விவசாயிகளின் உற்பத்திகள் கூட வீழ்ச்சியடைந்துள்ளன. கூலி உழைப்பாளிகளின் கொள்வனவுச்சக்தியானது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

50% தத்தால் குறைந்துள்ளது. ஆகக்கூடியுள்ள வறுமையுள்ள நாடுகளிலுள்ள மக்ககளுக்குக் கிடைக்கும் ஊட்டச்சக்தியின் அளவு, நாஜி (கிட்லரின்) தடுப்பு முகாம்களில் கொடுக்கப்பட்ட ஊட்டச்சத்திற்கும் குறைவாகவே உள்ளது.

இந்தக் குழப்பங்கள் ஏகாதிபத்திய நாடுகளில் ஏற்படுத்தும் தாக்கமானது, இந்த நாட்டுத் தொழிலாளர்கள் கடந்த சகாப்தங்களில் நடத்திய போராட்டங்களினாலும், அந்த வர்க்கங்களின் தளங்களின் பலத்தினாலும், கட்டுப்பாட்டினிற்குள் வைக்கப்பட்டுள்ளது. இருந்தும் இந்த நாடுகளில் வேலையில்லாமை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. செல்வந்த நாடுகளில், 1970ல் 100 இலட்சமாக இருந்த வேலையில்லாதோர் தொகை இன்று 400 இலட்சமாக அதிகரித்துள்ளது. ஒவ்வொரு நாட்டிலும் "புதிதாக" வறுமைக் கோட்டை அடைபவர்கள் நாட்டு சனத்தொகையில் 10% இருந்து 25% மாக உள்ளனர்.

சமூகத்தில் வளர்ந்துவரும் ஸ்திரமின்மை, பாதுகாப்பின்மை ஆகியவை அரசியல்ரீதியாக அரசிற்குப்பலம் சேர்க்கும் நடவடிக்கைகளாலும், ஜனநாயக உரிமைகளைக் கட்டுப்படுத்தலாலும் (முக்கியமாகத் தொழிற்சங்க உரிமைகள்), இனவாதத்தின் வளர்ச்சி, வெளிநாட்டவர்களுக்கெதிரான வெறி, மற்றும் தீவிர வலதுசாரி நவநாசிகளின் வளர்ச்சி ஆகியவற்றினால் வெளிப்படுத்தப்படுகின்றன. இன்று சித்திரவதையுட்பட அரசபயங்கரவாதம், ஏகாதிபத்திய நாடுகள் உட்பட 60 நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

சர்வதேச முதலாளித்துவங்களுக்கு ஏற்பட்டுவரும் இடர்களுடன் சோவியத் ருசியா, சீனா, கிழகைரோப்பா ஆகிய நாடுகளில் ஏற்பட்டுவரும் குழப்பங்களும் இணைகின்றன. (ஸ்டாலினிச) அதிகாரத்துவத்தின் தவறுதலான நிர்வாகத்தினால் ஏற்பட்ட சீரழிவுகள் அம்பலமாவதும், சில நாடுகளில் பொருளாதாரத் "திட்மிடலில்" ஏற்பட்ட தேக்கநிலையும் முதலாளித்துவத்திற்கு பிரதியீடாக வேறு எந்த சமூக அமைப்பு முறையும் கிடையாது என்ற எண்ணத்தை உருவாக்கியுள்ளது. அரசியல் சிந்தனை உள்ளவர்கள் மட்டுமல்லாது, மத்தியதரவர்க்கத்தினர், அதிகாரத்துவத்திலுள்ளவர்கள், புத்திஜீவிகளும் கூட தனியுடமையையும் முதலாளித்துவப் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்பவும் முயலுகின்றனர். மறுபுறத்தில் மக்களின் வெகுஜன நடவடிக்கைகளும் தொழிலாளர்கள் மத்தியில் காணப்படும் விழிப்புணர்ச்சியும் எதுவும் இன்னும் தீர்க்கமாக முடிவு செய்யப்படவில்லை என்பதையே காட்டுகின்றது. ஏகாதிபத்திய மேற்கு ஜேர்மனியினால் உள்வாங்கப்பட்ட கிழக்கு ஜேர்மனியில் முதலாளித்துவம் மீளக்கட்டப்படுவதே இதற்கு விதிவிலக்காக உள்ளது. கிழக்கைரோப்பாவில் இருமுனைப் போராட்டங்கள் - எஞ்சி இருக்கும் அதிகாரத்துவத்திற்கு எதிரான போராட்டம்; தனியுடமையாக்கப்படுவதற்கு எதிரான போராட்டம் என்பன வெளிப்படுகின்றன. இரண்டாவது உலக யுத்தத்தின் உலக நாடுகளில் ஏற்பட்ட பிரிவுகள் இன்று பழைய சரித்திரங்களாகிவிட்டன. ஐரோப்பாவிற்கு நடுவில் ஒரு கோடிட்டு இரு எதிரும் புதிருமான உலகங்களைப் பிரிப்பது சாத்தியமில்லாது போய்விட்டது. உலகத் தொழிலாள வர்க்க இயக்கங்கள், மற்றும் வெகுஜன இயக்கங்களின் கழுத்தில் கட்டிய கல்லாகத் தொங்கிய ஸ்டலினிசம் அகற்றப்படுகின்றது. இந்தத் தளர்வுகள் கடந்த பல தசாப்தங்களாக அரசுகளின் ராஜதந்திர நலன்களுக்காக அடக்கப்பட்ட வெகுஜனங்களின் சக்திகளை வெளிக் கொண்டுவரும். ஒரு குறுகிய காலத்திற்கு, ஸ்டலினிசத்தின் வீழ்ச்சியானது ஒரு அரசியல் புரட்சிக்கு இட்டுச் செல்லத்தவறியதனால் தொழிலாள வர்க்கத்தினுள் ஏற்படுத்தியிருக்கும் தடுமாற்றமானது, முதலாளித்துவத்தினுடைய அரசியல் தாக்குதல்களுக்கு உதவுவதாகவே உள்ளது. ஆனால் பொருளாதாரக் குழப்பங்களின் தாக்கங்கள், ஏகாதிபத்திய நாடுகளுக்கும் மூன்றாமுலக நாடுகளுக்குமிடையில் அதிகரித்துவரும் முரண்பாடுகள், பல நாடுகளில் எழுற்சி பெற்றுவரும் வெகுஜன நடவடிக்கைகள் ஆகியவை இதற்கு எதிரான வளர்ச்சியைக் காட்டுகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நீண்ட காலத்தின் அடிப்படையில் சர்வதேசமயப்படுத்தப்பட்டிருக்கும் உற்பத்தியும் தொழிற்பிரிவும், கலாசாரப் பரிமாற்றங்களும் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் எதிர் நடவடிக்கைகளும் இன்று இருக்கும் அரசுகளை ஆட்டம் காணச் செய்கின்றன. அமெரிக்க ஏகாதிபத்தியமும் ருசிய அதிகாரிகளும் செய்து கொள்ளும் ஒப்பந்தங்கள் எல்லாவற்றையும் மீறி உலக அரசியல் அமைப்புக்கள் ஆட்டம் காண்பதையும் இந்த சக்திகள் தமது ஆளுமையைச் செலுத்துவதில் கஷ்டமடைகின்றனர்.

சுரண்டப்படுபவர்களும் ஒடுக்கப்பட்ட மக்களும் தமது வாழ்க்கை படுகுழிக்குள் இட்டுச் செல்லப்படுவதை எதிர்த்து போராட்டங்களை நடத்தியே தீருவார்கள். அணுவாயுதங்களுக்கெதிராகவும், சூழலைப்பாதுகாப்பதற்கும், பெண்களின் உரிமைகளுக்காகவும் ஒடுக்கப்பட்ட இனங்களின் சுயநிர்ணய உரிமைகளுக்காகவும், இனவெறிக்கெதிராகவும், வேலை இல்லாமைக்கும் கட்டுப்பாடுகளுக்கெதிராகவும், ஏகாதிபத்தியங்களின் நடவடிக்கைகளுக்கெதிராகவும், மூன்றமுலக நாடுகளின் பஞ்சத்திற்கும் அவற்றின் தீராத பிணியான கடன் தொல்லைகளுக்கெதிராகவும், அதிகாரத்துவங்களின் சலுகைகளுக்கெதிராகவும் சர்வதிகாரங்களுக்கெதிராகவும் கடந்த சில வருடங்களில் பல லட்சக்கணக்கான ஆண்களும் பெண்களும் வெகுஜன ஆர்ப்பாட்டங்களில் பங்கு கொண்டுள்ளனர்.

பூரணமான விடுதலையைக் கொடுக்கும் மனித உரிமைகளையும் சமூக விடுதலையையும் சாதிக்கக்கூடியதும் குழப்ப நிலமைகளிலிருந்து விடுபடக்கூடிய வழிமுறைகளையும் காணப் போராட வேண்டியது அவசியமாகவுள்ளது. இந்த உரிமைகள் அரசியல் பிரஜா உரிமைகள் மட்டுமல்லாது, வேலைசெய்யும் உரிமை, வாழ்க்கைத்தரம், ஆரோக்கிய வாழ்வு, கல்வி, வீட்டுவசதி போன்ற சமூக உரிமைகளையும் உள்ளடக்கும். முதலாளித்துவத்தின் காட்டுத்தார்பாரும் அதிகாரத்துவங்களின் சர்வதிகாரங்களும் இந்தச் சவாலைச் சந்திக் முடியாதவைகளாகவே இருக்கின்றன. தொழிலாள வர்க்கத்தினாலும் ஒடுக்கப்பட்ட மக்களினாலும் முன்னெடுக்கப்படும் போராட்டங்களினால் இந்த அரசுகள் தூக்கியெறியப்பட்டு சோசலிசத்தின் அடிப்படையிலான சர்வதேச வியாபகமான தீர்வுகள் வெற்றி பெறும். இந்த வெற்றியானது பொறுமையான தியாகங்களினாலும் புத்திசாலித்தனமான சீர்திருத்தங்களாலும் பெற்றுவிடமுடியுமென எண்ணுவது வெறும் பகற்கனவாகும். சீர்திருத்த வாதப்போதனைகளினால் குழப்பங்களைத் தடுக்கவோ, போர்களை நிறுத்தவோ, சமூகப்புரட்சியைச் சாந்தப்படுத்தவோ முடியாது. போராட்டங்களிலும் பார்க்க விரக்தியினாலேயே அதிக இழப்புக்கள் மக்களுக்கு ஏற்படுகின்றன.

## பிரச்சனைகளுக்குச் சுலபமான முதலாளித்துவத் தீர்வுகள் கிடையாது.

இரண்டாவது உலகப்போரின் பின் ஏற்பட்ட இலாபங்களினால் போதையடைந்தவர்கள், முதலாளித்துவம் சமாதானமாக எல்லோருக்கும் முழுவேலைவாய்ப்பையும் தொடர்ந்து உயரும் கூலிகளையும் கொடுக்கும் என்று செய்த கற்பனைகள் சிதைக்கப்பட்டு விட்டன. சுரண்டப்படும் மக்கள் பொறுமையையும் மேலும் தியாகங்களையும் கடைப்பிடிப்பதன் மூலம் படிப்படியாக பொருளாதார மந்தத்திலிருந்து மீளலாம் என்று நம்புபவர்கள், குழப்பங்களுக்கும் சந்தைப்பொருளாதாரத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்புகளை அறியாதவர்களேயாகும்.

முழு சமூகத்தில் ஏற்படும் தாக்கங்களைக் கருத்திற் கொள்ளாது முடுக்கிவிடப்படும் போட்டி; குறுகிய கால இலாபங்களுக்காக முடிவில்லாத தேடல்; இந்தப்பைத்தியக்கார பந்தயத்திற்காக மனித இனம் கொடுக்க வேண்டிய விலையும் இயற்கைக்கு ஏற்படும் பாதிப்புக்களும்; தனிமனிதர், சமூகக்குழுக்கள், அரசுகளுக்கிடையிலான உறவுகளில் ஏற்படும் மூர்க்கமான முரண்பாடுகள்; தனிமனித ஆணவங்கள், ஊழல்கள், காட்டுத்தார்பார், பலவீனமானவர்களை ஒடுக்குதல் – இதுதான் முதலாளித்துவம்.

1970ல் ஆரம்பித்த மந்தநிலமை இந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடிப்படையிலேயே உருவாகியது. இதில் சில செழிப்பான காலங்களில்லாமல் இல்லை. ஆனால் இந்த இலாபங்களுக்கு எல்லாம் விலை கொடுத்தவர்கள் மூன்றாமுலகத்தில் வாழும் மக்களும் வறிய ஐரோப்பிய நாட்டு மக்களும்தான். இந்த முதலாளித்துவத்தினால் செல்வம் கொழிக்கும் நாடுகளில் கூட வேலையில்லாமையை இல்லாமல் செய்ய முடியவில்லை. தொடரும் மந்தநிலமை ஏழைகளுக்கும் நாதியற்றவர்களுக்கும் முடிவில்லாத பயங்கர வாழ்வாகவேயுள்ளது.

புதிய நீண்டகால முதலாளித்துவ வளர்ச்சியானது முதலாளித்துவ இலாபங்கள், தொழிலாள வர்க்கம் பாரிய அளவில் தோற்கடிக்கப்படுதல், ருசியா, சீனா, கிழக்கைரோப்பிய நாடுகள் உலக சந்தையுடன் இணைக்கப்பட்டு முதலாளித்துவத்தின் சிறப்பியல்பால் முன்னேற்றம் காணுதல் ஆகியவற்றிலேயே தங்கியிருக்கின்றது. ஆனால் இதில் எதுவும் நிகழ்ந்து விடவில்லை. எதுவும் நிகள்ந்துவிடப் போவதுமில்லை.

எம்மை அழிவுக்கு இட்டுச் செல்வது விஞ்ஞானத்தினதும் தொழில்நுட்பத்தினதும் கட்டுப்பாடற்ற வளர்ச்சியல்ல, அவை முதலாளிகளின் இலாபத்திற்காகவும் அதிகாரிகள் பொறுப்பற்ற முறைகளிலும் பாவிக்கப்படுவதனாலேயாகும். குறுகிய கால இலாபங்களுக்காக விஞ்ஞானம் பாவிக்கப்படும் பொழுது மிகவும் ஆபாயகரமான தொழில் நுட்பங்கள் வளருகின்றன. இவற்றிற்கெதிரான பரவலான நியாயமான போராட்டங்களும் முதலாளித்துவத்தின் அநியாயங்களும் எங்கும் முட்டி மோதுகின்றன.

விஞ்ஞான தொழில் நுட்பம் மனித இனத்திற்கு இன்றியமையாததுதான். நீண்டகால மனித இனத்தின் வரலாற்று மற்றும் சமூக நலன்களில் அக்கறை கொண்ட விஞ்ஞானம் அவசியம்தான் ஒவ்வொரு ஆணினதும் பெண்ணினதும் அறிவுபூர்வமானதும் உணர்வுபூர்வமானதுமான தீர்மானத்தின் அடிப்படையில் சமூகத்தின் வருங்காலமும் பொருளாதாரமும் இருக்க வேண்டியது அவசியம். அது வெறும் மூடநம்பிக்கைகளின் அடிப்படையிலேயோ, அல்லது மாற்ற முடியாது என்று நம்பப்படும் பொருளாதார விதிகளிலோ அல்லது இயற்கையாகவே நடை பெறும் நிகழ்வுகளாகவோ (இதுதான் விதி என்ற விரக்தியிலோ) விட்டுவிட முடியாது.

எல்லாக் கண்டங்களிலும் மனித உரிமைகளை வென்றெடுப்பதற்கான நடவடிக்கைகளே இந்தப் போராட்டங்களின் மையமாக விளங்குகின்றன. மனித மற்றும் அரசியல் உரிமைகளுக்கான போராட்டங்களுக்கும் சமூக மற்றும் பொருளாதார உரிமைகளுக்கான போராட்டங்களுக்குமிடையில் எந்தச் சீனப் பெருமதிலுமில்லை. முதலாளித்துவத் தனியுடமையும், தனிமனித இலாபத்திற்கு முதலிடம் கொடுக்கப்பட வேண்டுமென்ற கருத்தும் கோலோச்சும் எந்த ஒரு சமூகத்திலும் சகல மனிதருக்கும் அடிபடை உரிமைகள் உத்தரவாதமளிக்கப்படுவதில்லை. தொழிலாள வர்க்கத்தின் இயக்கங்கள் ஜனநாயக உரிமைகளின் உறுதியான ஆதரவாளர்களாக வேண்டும். மனித உரிமைகளுக்கான போராட்டங்கள் முதலாளித்துவத்திற்கெதிரான போராட்டங்களாக முன்னெடுக்கப்பட வேண்டும். ஆனால் முதலில் இந்தக் கோட்பாடுகள் தொழிலாள வர்க்க இயக்கத்தினுள்ளேயே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அது ஆட்சியிலிருக்கும் நாடுகளில் அந்த உரிமை மீறல்கள் நிறுத்தப்பட வேண்டும். அப்பொழுதுதான் தொழிலாள வர்க்கத்தின் இயக்ககங்கள் மக்களின் நம்பிக்கையையும் ஆதரவையும் பெறமுடியும்.

சர்வதேச ரீதியான ஆயுதக்குறைப்பு, சுற்றாடல் மாசு படுவதைத் தடுத்தல், மனித வாழ்க்கையின் அன்றாட போராட்டமாகிவிட்ட விரக்தி, துன்பம், பசி ஆகியவற்றிற்கு ஒரு முடிவு காணுதல் - மறுபுறத்தில் இந்த துன்பங்களை மறப்பதற்கு மனிதர்கள் சரண்புகும் மதுப்பழக்கம், போதை வஸ்துக்கள் ஆகியவற்றை இல்லாமல் செய்தல்; ஆனால் இவை எல்லலாவற்றிற்கும் எதிராகப் பலம் வாய்ந்த சக்திகள் வேலை செய்கின்றன. இந்தப் பிணிகளுக்கெல்லாம் முடிவு கட்டக் கூடிய அறிவும் மூல வளங்களும் இல்லாமல் இல்லை. ஆனால் இந்த தீய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சக்திகளின் கைகளில் அரச அதிகாரங்களும் இருக்கின்றன.

வேலைநிறுத்தம் செய்யும் உரிமையைக் கட்டுப்படுத்தல், தொழிற்சங்க சுதந்திரங்களை ஒரு வரையறைக்குள் வைத்திருத்தல், பத்திரிகைச் சுதந்திரங்களைக் கட்டுப்படுத்துதல், அத்துடன் உள்நாட்டு, வெளிநாட்டுப் பாது காப்பு என்ற போர்வையில் அரசியல் அதிகாரங்களையும் இரகசியப் பொலிஸ் அமைப்புக்களையும் பலப்படுத்துதல் - ஆகியவை மூலம் முதலாளித்துவம் தனது மேலாண்மையைப் பாதுகாக்கின்றது. இந்த உலக முதலாளிகளின் அதிகாரங்கள் தூக்கியெறியப்பட வேண்டியவைகளாகும். மனித குலத்தின் வருங்காலம் பாதுகாக்கப்பட வேண்டுமானால் அதன் தளமாக விளங்கும் பொருளாதாரப்பலம் அதனிடமிருந்து பறிக்கப்பட வேண்டும். மிதமிஞ்சிய உற்பத்தியினால் ஏற்படும் குழப்பநிலையே முதலாளித்துவப் பொருளாதாரத்தின் தன்மையாக இருக்கும் பொழுது - கோடிக் கணக்கான மக்கள் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமலே அல்லற் படுகின்றார்கள். வேலையில்லாமை, வறுமை, பெண்கள், சிறுபிள்ளைகள், வயோதிபர், வெளி நாட்டவர், தேசிய சிறுபான்மையினர் ஆகியோர் மீதான ஒடுக்கு முறைகள், இனவெறி ஆகியவை அற்ற முதலாளித்துவம் இருக்க முடியாது. தொழில் வளர்ச்சி ஏற்பட்ட காலத்திலிருந்து மிதமிஞ்சிய உற்பத்தி உருவாக்கும் குழப்ப நிலைமைகள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன. சென்ற காலங்களில் இவை எப்படித் தவிர்க்க முடியாதவையாக இருந்தனவோ அப்படியே இன்றும் இவை தவிர்க்க முடியாதவையாகவே இருக்கின்றன. இவற்றைக் கண்டும் காணாமல் இருப்பது குருட்டுத்தனமாகும். கடந்த காலங்களில் ஹிரோஷிமாவிலும் அஷ்விட்ஸிலும் ஏற்பட்ட அனர்த்தங்கள் போல மீண்டும் ஏற்படுவதைத் தடுக்காமல் இருப்பது பொறுப்பற்ற தன்மையும் கோழைத்தனமுமேயாகும்.

(தொடரும்)

( 7ம் பக்கத் தொடர்ச்சி )

இத்தகைய சிறு தவறுகளைக் கடந்தும் புலிகளிடமுள்ள சிறப்புத்தன்மையான 'விட்டுக்கொடுக்காமல்' போராடும் தன்மையை நாம் அங்கிகரிக்கவேண்டும்" என்ற அடிப்படையில் வைக்கப்படும் கருத்துகளில் உண்மையில் ஊறியிருக்கும் தேசியவாதம், தமிழ்பேசும் மக்களின் விடிவை நோக்கிய ஒடுக்குமுறை எதிர்ப்பை, இனவாதமெனும் (இதில் வலதுசாரித்தனமும் கலந்திருக்கும்) பாதாளத்தினுள் தள்ளி விழுத்தி மோதிச் சிதைத்து உருமாற்றிவிடும் அபாயத்தை அங்கிகரிக்கும் போக்கின் மறுவடிவமாகும்.

இத்தகையதொரு தேசியவாதம் எந்தளவிற்கு ஆரோக்கியமானது? என்ற நியாயமான கேள்வி கூட எழுப்பப்முடியாதநிலையானது, யுத்தத்தின் இரைச்சலிலுடன், அரசின் இனவாதமும் புலிகளின் கருத்துத்தடையும் இணைந்த சூழ்நிலையில், சாதாரண மக்கள் முன் விஸ்வரூபமெடுத்துள்ளது.

யுத்தசூழ்நிலமைகளுக்கும், புலிகளின் தலைமையின் இருப்பிற்கும் உள்ள தொடர்பை நாம் எம்மண்ணின் நிகழ்வுகளிலிருந்து அவதானிக்கலாம். இன்னுமொரு உண்மையையும் இங்கு கவனிக்க வேண்டும். அதுதான் மக்களின் கருத்துத்துச் சுதந்திரத்தை அடக்குவது புலிகளின் தலைமையின் நலன்களுடன் சம்பந்தப்பட்டது. தமிழ் மக்களினது இனவெறியரசிற்கெதிரான நியாயமான போராட்டத்தினது நலன் இன்று அடக்கப்பட்டிருக்கும் கருத்துச்சுதநதிரத்துடன் சம்பந்தப்பட்டது. இப்படியிருக்கையில் தமிழ் மக்களினதும் அவர்களது போராட்டத்தினதும் நலன்கள், எந்த வகையில் புலிகளின் நலனுடன் சம்பந்தப்பட்டது? என்ற கேள்வியாகும்.

இந்தக்கேள்வி தேசியவாதிகளை உறுத்தாமல் போகலாம், ஏனெனில் இவர்கள் தமிழ் மக்களின் போராட்டம் என்று குறிப்பிடுவது அரசு, புலிகளின் யுத்தத்திணிப்பையும், மக்கள் நலனில் அக்கறையற்ற தாக்குதல்களையுமேயாகும். புலிகளின் இன்றைய நடவடிக்கைகளுக்குப் பெயர் 'தேசிய விடுதலைப் போராட்டம்' அல்ல என்பதே எனது கருத்து.

**காளிதாஸ்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 1980 வேலை நிறுத்தத்தின் எதிரொலி.

## உயர் நீதிமன்றத்தில் 1980 சத்தியாக்கிரக வழக்கு

1980 ஜுலையில் நடைபெற்ற வேலைநிறுத்தம் காரணமாக இலட்சம் பேர் வேலை இழந்தனர். இப்பிரச்சனையை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வதற்காக 1980 ஒகஸ்ட் 8ல் நடத்தப்பட்ட சத்தியாக்கிரகம் இடம் பெற்றதிலிருந்து 11 வருடங்கள் சென்றுவிட்டன.

அன்றிலிருந்து இன்று வரை இந்த நாட்டில் நிலவும் ஏற்றதாழ்வுகள் தொடர்பாக எத்தனையோ போராட்டங்கள் நடந்து முடிந்துவிட்டன. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் இரத்த ஆறுகள் ஓடியும் முடிவில்லாத யுத்தமாகவுள்ளது.

1980 பொது வேலை நிறுத்தம் ஏற்படுத்திய சவாலின் எதிரொலி யூ.என்.பி. ஆட்சியாளரின் காதுகளில் விழவில்லை. ஆகையால்தான் எத்தனையோ எதிர்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்வழக்கை வாபஸ் பெறுமாறு விடுத்த கோரிக்கைகளையும் பொருட்படுத்தாமல் இந்த வழக்கு தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. யாரை மன்னித்தாலும் தொழிலாளர் போராட்டங்களுக்கு தலைமை தாங்கியவர்களுக்கு சிறிதளவாவது அரசாங்கம் தனது பிடியைத் தளர்த்த ஆயத்தமில்லையென்பதையே இது காட்டுகிறது. முன்பு எத்தனையோ அரச விரோத வழக்குகளை வாபஸ் பெற்ற அரசாங்கம் நியாயமான காரணங்களுக்காக நடைபெற்ற போராட்டம் தொடர்பான இந்த வழக்கை வாபஸ் பெறவில்லை.

12 தொழிலாளர் தலைவர்களுககு எதிராக கடுமையான குற்றச்சாட்டுக்களைக் கொண்ட இந்த வழக்கைப்பற்றி தங்களைச் சுதந்திரப் பத்திரைகள் என அழைத்துக் கொளபவர்கள் வேண்டிய பிரசாரத்தைச் செயத்தவறிவிட்டன. இப்பத்திரிகைகள் இத்தகைய விடயங்களை மூடி மறைப்பதன் மூலம் அரசாங்கத்துக்கு மறைமுகமாக உதவுகின்றன.

1980 வேலை நிறுத்தமும் சத்தியாகிரகமும் இன்று இடம் பெற்றுவரும் விலையேற்றங்கள் தனியார் மயப்படுத்தல் அரச பயங்கரவாதம் ஆகிய திட்டங்களுக்கெதிராக முடுக்கி விடப்பட்ட ஆரம்பகால போராட்டங்களாகும். மக்கள் எதிர் நோக்கும் பசி பட்டினி, பயங்கர தொற்று நோய் தொல்லை போன்ற துர்ப்பாக்கிய நிலையை முன்னேறிய தொழிலாளர்கள் முன் கூட்டியே அறிந்திருந்ததாலேயே அப்போராட்டங்களை அன்று ஆரம்பித்தனர். ஆகையாலேயே இந்த வழக்கை முடிந்தளவு மூடுமந்திரமாக நடத்த அரசாங்கம் எத்தனிக்கிறது.

இந்த நிலையை நாம் அம்பலப்படுத்த வேண்டும். இவ் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள 12 பேருடைய பிரச்சனை சட்டத்தரணிகளிகளின் வாதத்திறமையை மட்டும் பொறுத்ததல்ல.

இது தொழிலாளார்களினதும் நாகரீக சமூகத்தினதும் மிக அவசரமான பணியாக ஏற்றுச் செயற்பட வேண்டும். இல்லையேல், இன்று மௌனம் சாதிக்கும் பத்திரிகைகள், தொலைக் காட்சி, வானொலி ஆகிய தொலை தொடர்பு சாதனங்கள் "சத்தியாக்கிரக வழக்கில் 12 எதிரிகளும் சிறைத்தண்டனை" என்ற செய்தியை ஒத்த குரலில் ஒலிக்கச் செய்யும் நாள் வெகுதூரத்தில் இல்லை.

1980 ஒகஸ்ட் 8ம் திகதி சத்தியாக்கிரகப் போராட்ட வழக்கில் கடுமையான குற்றச்சாட்டு சுமத்தப்பட்டவர்களின் பெயர்கள் வருமாறு:

விக்கிரமாகு கருணாரத்ன.( பொதுச் செயலாளர் நவசமசமாஜக் கட்சி )

வாசுதேவ நாணாயக்காரா.( பாராள மன்ற உறுப்பினர். ந.ச.ச.க)

அலவி மௌலானா (ஸ்ரீ லங்கா சுதந்திர தொழிலாளர் சங்கம் )

( 12ம் பக்கம் பார்க்க )



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1980 ஜூன் மாதம். இலங்கை தொழிற்சங்கங்களின் கூட்டுக் கமிட்டியில் இணைந்திருந்த தொழிலாளர்கள் ஐ.தே.கட்சி அரசாங்கத்தின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கெதிராகவும் தமது கோரிக்கைகளுக்காகவும் தமது காரியாலயங்கள், தொழிற்சாலைகள் முன் மறியல் போராட்டங்கள் நடத்தினர். இந்தப் போராட்டங்களை ஒடுக்குவதற்காக அரசாங்கம் தமது காடையர்களையும் பொலிசாரையும் ஏவியது. காடையர்களின் தாக்குதல்களினால் சோமபாலா என்ற தொழிற்சங்கவாதி கொல்லப்பட்டார்.

* * *

சோமபாலாவின் மரணத்தின் பின் யாழ்ப்பாணம் திரும்பியிருந்தேன். வண.பிதா ஜயசீலன் உச்சி வெயிலில் போய்க் கொண்டிருந்தார்.

"ஏங்கே, பாதர்" என்றேன்.

"மனிதன்" பத்திரிகைக்கு ஜெயபாலனிடம் ஒரு கவிதை எடுக்கப் போகிறேன்" என்றார்.

சில மணி நேரம் கழித்து ஒரு துண்டுப்பேப்பரில் "மனிதத்திற்"கான கவிதை தயாராக இருந்தது.

தமிழ் இளைஞர் போராட்டம், சிங்களத் தொழிலாளர் போராட்டம், இவர்களைப்பிரிக்கும் இனவாதம், ஒடுக்கும் அரசு, இதற்கெல்லாம் ஒரு விடிவு.. இவற்றையெல்லாம் பிரதிபலிக்கும் இந்தக் கவிதை, ஒரு வரலாற்று நிகழ்வின் அரசியல் மொழிபெயர்ப்பு.

(K.P)

## சோமபாலாவுக்கு அஞ்சலி

எழுபத்தேழில்
மரண பயத்தால் உயிரைக் காக்க
சாவின் வாசலில் பதுங்கியிருந்தோம்.
வெண்புறாக் குஞ்சாய் எங்கள் பிள்ளைகள்
வெப்பக் காற்றில் வாடிய முல்லைகள்.
வானொலி எங்களைப் போருக்கழைத்தது.
யாழ்பாணத்துத் தெருக்களில்கூட
எங்கள் ரத்தம் சுவைக்கப்பட்டதாம்.

நெடுநாள் கழிந்து எண்பதாம் ஆண்டில்
நீதி கேட்டு நீங்களும் எழுந்தீர்.
வானொலி மீண்டும் பாழ்வாய் திறந்தது.
வயிற்றில் அடிக்க வேண்டாமென்ற
சோமபாலவின் மனைவி மக்களின்
வயிற்றிலும் நிரந்தர அடி விழுந்தது.
வட்டிக் கடையில் பொற்சங்கிலியை
இழந்த பெண்களுக்குச் சைக்கிள் சங்கிலி.
இதுதான் இந்தக் கலியுக தர்மம்.
இதுதான் சாத்தான் ஓதும் வேதம்.
எங்களை மிதித்த அதே சப்பாத்துக்கள்.
எங்களை விளாசிய அதே சங்கிலிகள்
முகவாய் இரத்தம் துடைக்கும்போது
அடையாளத்தைக் கண்டுகொள்வீர்.
போர்ச் சன்னதங்கள் மௌனமான
*சோமபாலாவின் சமாதியில்
கண்ணீர்மாலை சூடினோம் நாங்கள்.

எங்கள் இளைஞரின் ஆறாத சாம்பரை
உங்கள் கண்ணீர் ஆற்றிடுமானால்
கிருதயுகத்து அசுரன் தோன்றுவான்;
மலைகளைப் பிடுங்கி மடுவில் வீசுவான்.
உதைக்கும் அந்தச் சாப்பாத்துக்களையும்
அடிக்கும் அந்தச் சங்கிலிகளையும்
நரக லோக மூலையில் புதைப்பான்.
விருந்துகள் உண்டு சதுரங்கமாடும்
இந்த நாட்களின் துட்டகைமுனுவை**
இந்த நாட்களின் எல்லாளனோடு
பாதாளத்துள் தூக்கி வீசுவான்.
பீனிக்ஸ் பறவைபோல்
எங்கள் இளைஞரின் சாம்பர் உயிர்க்கும்.
சோமபாலாவின் சமாதி திறக்கும்.

வ.ஐ.ச. ஜெயபாலன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ் பேசும் மக்களுக்கு தேவைப்படுவது விடுதலையே ஒழிய போலியான உடன்பாடுகள் அல்ல

*வாசுதேவ நாணயக்கார*

ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட அரசியல் குற்ற பிரேரணையை அடுத்து பாரதூரமான அரசியல், அரசியலமைப்பு ரீதியான நெருக்கடி இன்று இந்த நாட்டில் உருவாகியுள்ளது. இதன் காரணமாக எங்கு பார்த்தாலும் ஆழஅகலமான பிரச்சாரங்களும் விவாதங்களும் நடத்தப்பட்டு வருவது இயற்கையானதே.

குறிப்பாக தமிழ் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வினை பொறுத்த வரை தமிழ் தலைவர்கள் ஜனாதிபதி ஆட்சி முறையை ஆதரித்தும் எதிர்த்தும் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். இச்சந்தர்ப்பத்தில் நான் சில கருத்துக்களை முன் வைப்பது மிக முக்கியமென கருதுகிறேன். இக் கருத்துக்கள் உண்மையில் நவசமசமாஜ கட்சியின் அடிப்படைக் கொள்கைகளையும் நிலைப்பாடுகளையும் கோடிட்டு கூறுவதாகவே அமையும்.

முதலாவதாக தமிழ் பேசும் மக்கள் தமது தேசிய இன, ஜனநாயக உரிமைகளை வென்றெடுப்பதற்கு தென்னிலங்கையிலுள்ள சிங்கள முதலாளித்துவ தலைவர் எவரோடாவது ஏதாவது மேல்மட்ட, போலியான உடன்படிக்கை செய்து கொள்வது எள்ளவும் பயனற்றது என்பதை எவரும் மறுக்க முடியாது. கடந்த 30 - 35 வருட கால கசப்பான அனுபவம் இதை தெட்டத் தெளிவாக விளக்குகிறது. கடந்த காலத்தில் மேற் கொள்ளப்பட்ட அத்தகைய உடன்படிக்கைகள் அவற்றின் மேலான மை காயமுன்பே காற்றில் பறக்கவிடப்பட்டன. இது பற்றிய வரலாறு அடிக்கடி கூறப்பட்டு மக்களுக்கு நன்கு ஞாபகத்தில் இருக்குமாகையால் அதை இங்கு விபரித்துக்கூறத் வேண்டியதில்லை.

ஜனாதிபதி தேர்தலில் அபேட்சகர் ஒருவர் வெற்றி பெறுவதற்கு சிறுபானமையினரின் வாக்குகளிலும் தங்கி இருக்க வேண்டும். ஆகையால் அவர் அவர்களின் உரிமைகளை வழங்குவதற்கு கடப்பாடு உடையவராக இருப்பார். என்பதால் ஜனாதிபதி ஆட்சி முறை ஆதரிக்கப்பட வேண்டியதென்பது சில தமிழ் தலைவர்களின் நிலைப்பாடாகும். இது தர்க்க ரீதியானது என அவர்கள் எண்ணுகிறார்கள் போலும். ஆனால் கடந்த கால சம்பவங்கள் இதற்கு நேர்மாறானவை என்பதை எவரும் மறுத்துவிட முடியாது. 1978இல் ஜனாதிபதி ஆட்சிமுறை வந்த பின்னர் தான் தமிழ் பேசும் மக்கள் மேன் மேலும் கொடுமையான அழித்தொழிப்புக்கு ஆளாக்கப்பட்டு வந்துள்ளனர். எனவே இந்த ஆட்சிமுறையை தமிழ் தலைவர்கள் ஆதரிப்பதற்கு என்ன நியாயம் உண்டு? ஜனாதிபதி ஆட்சிமுறை சகல அதிகாரங்களையும் ஒரு தனிநபர் கையில் குவித்து வைப்பதற்கே வழி வகுத்துள்ளது. ஆனால் குறிப்பாக இன்றைய ஜனாதிபதி பிரேமதாச சென்ற தேர்தலில் தமிழ் பேசும் மக்களின் கணிசமான அளவு ஆதரவுடன்தான் தெரிவு செய்யப்பட்டிருந்தும் கூட, சிங்கள பேரினவாத சக்திகளை மீறி தனது அதிகாரங்களை பயன்படுத்தி தமிழ் பேசும் மக்களின் உரிமையை வழங்க முன்வரவில்லை என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

எனவே தமிழ் பேசும் மக்களுக்கு அவசியமானது, அடிப்படையில் சிங்கள பேரினவாதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் முதலாளித்துவ சிங்கள தலைவர்களுடன் செய்து கொள்ளும் போலியான உடன்படிக்கைகள் அல்ல என்பது மேற் கூறியவற்றில் இருந்து தெளிவாக தெரிகிறது. மாறாக, அம்மக்கள் தமது சக்தியை இந்த நாட்டில் ஒரு முத்திரையாக பதியச் செய்ய வேண்டும்.

அத்தகைய சக்தியை எவ்வாறு நிலைநாட்ட முடியும்? எங்கே இருந்து அதனைப் பெற்றுக் கொள்ள முடியும்? இவை பொதுமையாகவும் ஆழமான முறையிலும் ஆராய்ந்து செயற்படுத்த வேண்டிய பணிகளாகும். இவற்றைச் சற்று பின்பு கூறுவோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனா 1978ம் ஆண்டில் அரசியலமைப்பில் தமிழுக்கு "தேசிய மொழி" அந்தஸ்து வழங்கப்பட்டதன் மூலம் சிங்கள பேரினவாத சக்திகளுடன் முரண்படாமல் தமிழ் பேசும் மக்களின் பிரச்சனையை தீர்த்துவிட்டதாக எண்ணினார். ஆனால் அதுதான் பிரச்சனைக்கான தீர்வு அல்ல என்பதை அவர் பின்பே உணர்ந்தார். அதன் பின்பு அவர் 1981 இல் மாவட்ட அபிவிருத்திசபை முறையை கொண்டுவந்தார். அதுவும் ஒரு வீண் முயற்சியே என்பதை பின்பு தான் கண்டு பிடித்தார். அத்திட்டத்தை முதலில் தமிழ் தலைவர்கள் ஏற்று பிரசாரமும் செய்தனர். அந்த வேளையில் நவசமசமாஜக்கட்சியே அது ஒரு செல்லாக்காசு என அம்பலப்படுத்தியது. பின்பு அத்திட்டம் இயற்கை மரணம் எய்தியது. ஜே.ஆர் அதன் பின் 1984இல் சர்வகட்சி மாநாடு என்னும் ஒரு நாடகத்தை நடத்தி ஒரு வருட முடிவில் முடிவெதுவுமின்றி தன்னிச்சையாக அதனைக் கலைத்து விட்டார். அதன் பின்பு அவர் இராணுவ அணுகுமுறைக்கு நகர்ந்து வடமராச்சியில் "ஒப்பரேசன் லிபரேசன்" என்றழைக்கப்படும் பலத்த தாக்குதலை நடத்தினார். அதன் பின்னரே அவர் குறிப்பாக இந்திய அரசின் நெருக்குதல் காரணமாக தனது அதிகாரத்தை பாவிக்கத் தள்ளப்பட்டார். மாகாணசபை முறையின் மூலம் வடக்கு கிழக்கை தற்காலிகமாக என்றாலும் இணைத்து, ஏட்டளவில் என்றாலும் அதிகாரப் பரவலாக்கல் செய்யப்பட வேண்டிய அளவுக்கு அவர் இணங்க வேண்டியதாயிற்று.

மறுபுறத்தில் பெரும் தோட்டத்துறையிலும், வடக்கு கிழக்கிலும் உள்ள தமிழ் பேசும் மக்களின் வாக்குகளின் உதவியுடன் தெரிவு செய்யப்பட்ட இன்றைய ஜனாதிபதி பிரேமதாச, மாகாணசபை முறையினை முற்று முழுதாக செல்லாக்காசாக்கும் அளவுக்கு அனைத்து அதிகாரங்களையும் தனது கையில் எடுத்துக் கொண்டதுடன் மாகாணசபைக்கு பரவலாக்கப்பட்ட அதிகாரங்களை அகற்றுவதற்கும், பரவல்படுத்தப்பட்ட விடயங்களை புதிய சட்டங்கள் மூலம் பறித்தெடுக்கவும் செய்தார். மாகாணசபைக்கு அதிகாரங்கள் பரவலாக்கப்படுவதை அவர் ஆரம்பத்தில் இருந்தே முற்றாக எதிர்த்தார் என்பது தெரிந்ததே. ஜனாதிபதி பிரேமதாச சிங்கள பேரினவாதத்தை பேணி வளர்ப்பதில் மட்டுமல்லாது மறைத்து வைத்து காரியமாற்றுவதிலும் கைதேர்ந்தவர். (உதாரணமாக நன்னீர் மீன்பிடித்தல் திட்டத்தையும் அத்தோடு அதற்கான திணைக்களத்தையும் யாருடனும் கலந்து ஆலோசிக்காமல் தன்னிச்சையாகவே முடிவைத்தார்.) எனவே ஒருவகையில் எந்த ஆட்சிமுறை சிறந்தது என்பதைவிட களத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் அரசியல், சமூக சக்திகள் எத்தகையவை என்பதே முக்கியமானதாகும். மேலும் அனைத்து ஒடுக்கப்படும் மக்களுக்கும் அனுகூலமான சக்திகளின் கை மேலோங்குவதற்குரிய புதிய நிலைமையை ஏற்படுத்துவதற்கு நாம் எல்லோரும் விடாப்பிடியாக முனைய வேண்டும்.

வடக்கு கிழக்கில் கடந்த 2 அல்லது 2 1/2 வருட காலத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் காணாமல் போயும் விமானக் குண்டு வீச்சு, "ஆட்டலரி", செல் தாக்குதல் மூலமாக கொல்லப்பட்டும் உள்ளனர். இது மட்டுமே ஜனாதிபதி பிரேமதாசவின் அணுகு முறையையும் மனப்பாங்கையும் துல்லியமாக எடுத்துக் காட்டுகிறது. நீண்ட கால அடிப்படையிலாவது சுயாட்சி முறையை நோக்கி நகரக்கூடிய கருப்பொருளையும் வடிவத்தையும் மாகாணசபை முறை கொண்டிருந்தது. ஆனால் மேலே கூறப்பட்டது போல, அரசியலமைப்பின் 13வது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்ட பரவலாக்கல் திட்டம் சுருட்டிக் கட்டப்பட்டது. விடுதலைப் புலிகளின் விருப்பத்தை நிறைவேற்றுவதென்ற சாட்டில் குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணசபையை கலைத்து விடும் உடனடித் தேவைக்காக 1990 யூன் மாத முற்பகுதியில் நிறைவேற்றப்பட்ட திருத்தச்சட்டத்தின் மூலமே ஜனாதிபதி பிரேமதாச தனது விருப்பத்தை நடைமுறைப் படுத்தினார். அதற்கு சில நாட்களுக்கு முன்பு அவருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளும் முறிவடைந்துவிட்டன. அப்படியாயினும் கூட ஜனாதிபதி பிரேமாதாசவைத்தான் ஆதரிக்க வேண்டுமென்றும் அவர் ஜனாதிபதி பதவியில் இருந்து அகற்றப்படக்கூடாது என்றும் விடுதலைப்புலிகள் நினைக்கக்கூடும். 14 மாதங்கள் அவர்களுடன் பேசிய ஜனாதிபதி பிரேமதாச பிரச்சனையைத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தீர்ப்பதற்கு எந்தவொரு ஆலோசனையையும் முன்வைக்கவில்லை என்பதை யாரும் மறந்துவிடமாட்டார்கள். அதுமட்டும் அல்லாமல் அண்மையில் முஸ்லீம் காங்கிரஸ் வருடாந்த மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி பிரேமதாச தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இப்பிரச்சனை பற்றியதான தீர்வுக்கு தான் எந்தவித ஆலோசனையையும் முன்வைப்பதாகக் கூறவில்லை என்று அடித்துக் கூறியிருந்தார். அவ்வாறாயிருந்தும் கூட விடுதலைப்புலிகள் பிரேமதாசவை ஆதரிக்க வேண்டும் என்று எண்ணுவார்களேயானால் அது எவ்வாறு நியாயமானதாகும்? தமக்கு ஒரு அவகாசம் தேவைப்படுவதாக அல்லது வேறு எந்தவொரு நோக்கத்திற்காக ஒரு உடன்பாட்டுக்கு வரும் நோக்கம் இதில் தொக்கி நிற்கின்றதா?

வடக்கு கிழக்கு மாகாணசபையைக் கலைத்து அதிகாரப்பரவலாக்கல் நடவடிக்கையை நிறுத்தியதற்கு காரணம் தமிழீழ விடுதலைப்புலிகள் பிறிதொரு திசையில் முன்னேறுவதற்காகவே மேற் கொள்ளப்பட்டது என்று பிரேமதாசவை ஆதரிப்பவர்கள் கூறுவார்களேயானால் வடக்கு கிழக்கில் இன்றும் தொடர்நது நடாத்தப்படும் அழித்தொழிப்பு யுத்தத்திற்கு காரணம் ஜனாதிபதி பிரேமதாச அல்ல என்றா கூறுகிறார்கள்? பிரதானமாக தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆயுதம் வழங்கினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பிரேமதாச தனது அதிகாரத்துக்கு ஒரு சவாலை எதிர் நோக்குகிறார். பிரேமதாசவின் அரசாங்கம் தமிழ் பேசும் மக்களின் மீது கட்டவிழ்துள்ள பேரழிவுகளை கணக்கிலெடுக்காமல் மேற்படி குற்றச்சாட்டை மட்டும் மையமாக வைத்து பிரேமதாசவின் ஏதோச்சதிகாரமான ஜனாதிபதி ஆட்சி முறைக்கு ஆதரவளிப்பது ஒரு போதும் நியாயமானதாக இருக்க முடியாது. இதே ஜனாதிபதி தனது தற்போதைய நெருக்கடி நிலை முற்றுப் பெற்றதும் தனது பேரினவாத சுயரூபத்துடன் மீண்டும் தோன்றுவார். தமிழீழ விடுதலைப்புலிகள் தமது தவறான கணிப்புகளாலும் திட்டமற்ற செயற்பாடுகளினாம் தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்படுத்தியுள்ள பாதுகாப்பினமையும் பயப்பிராந்தியும் மிக அதிகமானதாகும்.

மறுபுறத்தில் தேசிய இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கு பாராளுமன்ற ஜனநாயக முறைதான் உகந்தது என்று சில தமிழ் தலைவர்கள் கூறுகிறார்கள். 1948 முதல் 1978 வரை அதாவது 30 வருட காலமாக நடைமுறையிலிருந்த பாரளுமன்ற ஜனநாயக முறை இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கு தவறிவிட்ட கேவல நிலையை யாரும் அறிவர். ஆரம்பத்திலிருந்து சோல்பெரி அமைப்பின் கீழ் என்றாலும் சரி பின்பு 1972ல் கொண்டுவரப்பட்ட குடியரசு அமைப்பின் கீழ் என்றாலும் சரி இப்பிரச்சினை தீர்க்கப்படவில்லை என்பதே மறுக்க முடியாத உண்மையாகும். எனவே முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயக முறை ஆட்சி முறையா அல்லது முதலாளித்துவ ஜனாதிபதி ஆட்சிமுறையா தேசிய இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு உகந்தது என்பதல்ல கேள்வி.

இன்று ஜனாதிபதி பிரேமதாசவின் ஆட்சியின் கீழ் விமான குண்டுவீச்சு உட்பட ஈவிரக்கமற்ற இராணுவத்தாக்குதல்களை எதிர் நோக்குவதுடன் உயிர் வாழ்வதற்கு வேண்டிய அத்தியாவசியப் பொருட்களுக்கு விதிக்கப்பட்ட மனிதாபிமானமற்ற தடைக்கும் முகம் கொடுத்துக் கொண்டு முன்னெப்போதும் கண்டிராத அளவு வேதனையை சுமந்து வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் பேசும் மக்கள் செல்ல வேண்டிய பாதை எது?

முதலாவதாக தமிழ் பேசும் வடக்கு கிழக்கு மக்கள் புதிய யுக்திகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அவற்றில் நம்பிக்கை வைக்க வேண்டும். அதாவது சிங்கள மக்கள் மத்தியிலுள்ள பேரினவாமற்ற பிரிவினர், பெரும் தோட்டத்துறை தமிழ் தொழிலாளர்கள், முஸ்லீம் சிறுபான்மை மக்கள் ஆகிய சக்திகளை அணிதிரட்டி நாட்டில் உள்ள சக்திகளின் சமன்பாட்டில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்த வேண்டும். இத்தகைய திரண்ட சக்தியினால் தான் பேரினவாதத்தை முறியடிக்க முடியும். சிங்கள மக்கள் மத்தியில் அத்தகைய பேரினவாதமற்ற சக்திகள் இருக்கின்றனவா என்று யாரும் கேட்கக் கூடும். அப்படியான சக்திகள் ஸ்ரீ.ல.சு.க கீழ் மட்டத்திலும் ஏன் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியிலும் கூட இருக்கின்றன என்பதை நான் அடித்துக் கூறுவேன். சிங்கள பௌத்த தென்னிலங்கை பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் இது எனது

www.tamilarangam.net

உறுதியான கருத்தாகும்.

தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக நான் எவ்வளவு தூரம் பகிரங்கமாக போராடி வந்துள்ளேன் என்பதையும் நவசமசமாஜக்கட்சி இதை தனது அசைக்க முடியாத கொள்கையாக முன்னெடுத்து வருகிறது என்பதையும் யாரும் அறிவர். சிங்கள பௌத்த மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தல்களில் கூட வேறு எந்த கட்சியுடனும் இணையாமல் தனியாகவே போட்டியிட்ட நவசமசமாஜகட்சி தேசிய இனப்பிரச்சனை மீது, தனது இறுக்கமான நிலைப்பாட்டின் மீது பிரசாரம் செய்தது. ஒப்பீட்டு ரீதியில் பார்க்கும் போது கணிசமான அளவு இடங்களையும் பெற்றது. பயங்கரவாதத்தையும் குண்டு தாக்குதல்களையும் பொருட்படுத்தாமல் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக விஜயகுமாரணதுங்கா வாழ்ந்த காலத்தில் நடத்தப்பட்ட பிரச்சாரக் கூட்டங்களில் பல்லாயிரக் கணக்கான மக்கள் பங்கு பற்றினர்.

இது கடினமான பாதை என்றாலும் கூட இதுதான் யதார்த்த பூர்வமானதும் பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்குரியதுமான பாதையாகும். எவ்வளவு தூரம் தமிழ் தேசிய சக்திகள் இதனை உணர்வு பூர்வமாக ஏற்கிறார்களோ அவ்வளவு விரைவாக பிரச்சினை தீர்வை நோக்கிச் செல்லும். அதே நேரத்தில் முஸ்லீம் மக்களின் ஜனநாயக உரிமைகளும் அவர்களின் கலாச்சார ரீதியான தனித்துவமும் அபிலாசைகளும் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டும் என்பதனை கூறி வைக்க விரும்புகின்றேன்.

1977 முதல் ஜனநாயக விழுமியங்களும் நடைமுறைகளும் அருகி வந்துள்ளதுடன் ஒரு ஏதேச்சதிகாரசக்தி வளர்க்கப்பட்டு ஒரு தனி நபர் கையில் நிறைவேற்று அதிகாரம் குவிக்கப்பட்டுள்ளது. தற்போது இந்த அதிகார குவிப்புக்கு எதிராக யூ.என்.பி.யின் ஒரு பிரிவினர் ஒரு புறத்திலும் எதிரணிக்கட்சியினர் கூட்டாக மறுபுறத்திலும் வெவ்வேறு நோக்கங்களுக்காக போராடிவருகின்றனர். தற்சமயம் இறுதி நோக்கங்கள் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. தற்போதைய இந்த போராட்டம் தனிநபர் ஏதேச்சதிகார ஆட்சியை அகற்றி முதலாளித்துவ ஜனநாயகம் செயல்படுவதற்கு வழியமைக்கும்.

தமிழ் மக்கள் இந்த போராட்டத்தில் ஒரு அங்கமாக விளங்கவேண்டும். ஏன் என்றால் முதலாவதாக தமது தேசிய உரிமை போராட்டத்தை தொடர்வதற்கு ஜனநாயக ரீதியிலான அவகாசம் ஏற்படும். இரண்டாவதாக பேரினவாதமற்ற முற்போக்கு சிங்கள மக்களையும் பொதுப்போராட்டத்தில் இணையச் செய்து எதிர்காலப் போராட்டங்களில் இந்த இணைப்பை உருக்கு மாதிரி கட்டி வளர்க்க முடியும். மலையக தமிழர்களையும் முஸ்லீம் சிறுபான்மையினரையும் இதே மாதிரி அணுகி இந்த பொது இணைப்பில் இணைக்க வேண்டும். இவ்வாறாகவே தேசிய இனங்களின் உரிமைகள் உட்பட ஜனநாயகத்தை பேணி வளர்க்கக்கூடிய ஒன்று திரண்ட சக்தியை உருவாக்க முடியும்.

வடக்கு கிழக்கில் நடைபெறும் யுத்தம் ஒரு வெற்றியற்ற யுத்தம், என சற்று நீண்ட காலமாக கூறப்பட்டு வந்துள்ளது. இராணுவ நடவடிக்கைகள் இரு தரப்பினருக்கும் பலனளிக்கவில்லை. இதன் பின்னணியிலேயே அரசியலமைப்பு ரீதியான நெருக்கடியும் தோற்றம் பெற்றுள்ளது. அரசாங்கம் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக எந்தவித ஆலோசனைகளையும் முன் வைக்காமலேயே இராணுவ ரீதியான அணுகுமுறையை மேற் கொண்டு வருவதை நாம் வன்மையாக கண்டிக்கிறோம். அதே நேரத்தில் தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டம் வெற்றிப்பாதையில் முன்னெடுக்கப்பட வேண்டியதற்கு உகந்த யுக்திகள் தந்திரோபாயங்கள் தொடர்பாக புதிய சிந்தனைகள் உருவாக்கப்படுவது மிக அவசியமென்பதை அடித்துக்கூற விரும்புகிறேன். இப் போராட்டம் இனி மேலும் தேசிய ரீதியாகவோ சர்வதேசிய ரீதியாகவோ தனிமைப்படுத்தப்படக் கூடாது.

செப்டம்பர் 1991.

www.tamilarangam.net



## நாங்களும் எங்கள் பொழுதும்....

*நேற்றும் தலையுயர்த்தி*
*நடந்த தெருக்கள்தான்*
*இப்போது நெஞ்சிடிக்க*
*எவனெவனோ*
*கைகொண்டு கழுத்தை நெரிக்கும் கனவுகள்*
*நேற்றல்ல, இன்றல்ல*
*நாளைக்கென் வீட்டில்*
*அதிரும் என்றுய்த்தபறை*
*செவிக்குள் அதிர்கிறது.*

*மலங்க விழித்தபடி*
*இருண்ட கண்களினால்*
*எதுவோ தேடும்*
*நாங்களும், எங்கள் பொழுதும்.*

( இளவாலை விஜயேந்திரன்)

இப்படியான நிலைமைகள் சொந்த நாடுகளில் தோன்றியபடியால் அன்னிய நாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்தனர் ஆயிரக் கணக்கானோர். ஆனால் இன்று அப்படி தஞ்சமடைந்த நாடுகளிலும் - ஜேர்மனியில் குறிப்பாக - தோன்றியிருக்கும் இனவெறியும் நிறவெறியும் தஞ்சமடைந்த நாடுகளில், இதே நிலைமைகளை, அந்த மக்களுக்குத் தோற்றுவித்துள்ளன. அகதிகளாகத் தஞ்சமடைந்தவர்களை நாடுகடத்த அரசாங்கங்கள் ஏற்படுத்தும் சட்டங்கள் மட்டுமல்லாமல் அவர்கள் மீதான வன்முறைத் தாக்குதல்களும் அதிகரித்துள்ளன. ஜேர்மனியின் பல பாகங்களிலுமுள்ள அகதிகளின் வீடுகள் தாக்கப்பட்டு தீவைக்கப்பட்டுமுள்ளன. பலர் தாக்கப்பட்டுள்ளதுடன் சில உயிரிழப்புக்களும் ஏற்பட்டுள்ளன.

இத்தாக்குதல்களை நடத்துவது வலதுசாரி நவநாசிகள்தான் என்றாலும் இவர்களுடைய செயல்களுக்கு தூபம் போடுவது ஆட்சியாளரின் பேச்சுக்களும் நடவடிக்கைகளுமாகவே இருக்கின்றன. வெளிநாட்டு அகதிகளை அகற்ற சட்ட மூலம் சாத்தியமாகாவிட்டாலும் அவர்கள் மீது வன்முறைகளைப் பாவித்து தமது எண்ணங்களைப் பூர்த்தி செய்யலாம் என சில இனவாதிகள் எண்ணுகின்றார்கள் போலும்.

வெளிநாட்டவர்களின் வருகையினாலும் அவர்கள் சம்பந்தமான அரசியல் கொள்கைக் குழறுபடிகளாலுமே வலதுசாரி நவநாசிகள் வளருகின்றார்கள் என 34%மான மக்கள் எண்ணுவதாக "சிபீகல்" பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது. ஜேர்மன் மாநில தேர்தல்களில் இனவாத வலதுசாரிக் கட்சிகளுக்கு ஆதரவு அதிகரிப்பது ஒரு அபாய அறிவிப்பாக அமைந்துள்ளது. "பிரேமன்" மாநில தேர்தலில் ஆறு வலதுசாரி இனவாதக் கட்சியினர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சூழ்நிலைமைகளில் இனவாத எதிர்ப்புவாதிகள், முற்போக்கு அணியினர் ஆகியோரின் நடவடிக்கைகள் இந்த நடவடிக்கைகளுக்கு எதிராகத் தொடருகின்றன. இவற்றுக்கு எமது ஆதரவுகளை அளிக்க வேண்டியது அவசியமாகும்.

மறுபுறத்தில் இந்த விடயங்கள் எமக்கு உணர்த்த வேண்டிய முக்கிய விடயங்கள் உள்ளன.

எமது நாட்டில் யுத்த பீதியற்ற, பயங்கரவாதமற்ற, சமாதானமான சூழ்நிலைமைகள் உருவாகுமானால், எமக்கும் எமது சந்ததிகளுக்கும் ஒரு சுபீட்சமான வாழ்க்கை நாட்டில் ஏற்படுமானால்; எம்மை வேண்டாத இந்த நாடுகளில் தங்கும் அவசியம் எவருக்கும் ஏற்படாது.

இந்த நிலமைகளை எமது நாட்டில் உருவாக்குவதற்கு எம்மால் ஆனவரை உழைப்பதுதான் இந்தப் பிரச்சனைகளுக்கான முழுமையான தீர்வாக அமையும். எமது நாட்டில் நாம் மீண்டும் "சுதந்திரமாக வாழ்வதற்கு" எம்மால் என்ன செய்ய முடியும் என்பதை ஒவ்வொருவரும் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.